பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஐப்பசி 25 சனிக்கிழமை (11.11.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 346

# ரவிராஜ் எம்.பி. சுட்டுப் படுகொலை

## கொழும்பில் நேற்றுக்காலை கொடூரம்



கொழும்பு, நவம்பர் 11

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், இளம் தமிழ் அரசியல்வாதியும், யாழ். மாநகர முன்னாள் மேயருமான நடராஜா ரவிராஜ் (வயது-44) நேற்று கொழும்பில் இனந்தெரியாத ஆயுததாரிகளினால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார். இந்தச் சம்பவத்தில் அவரது மெய்ப் பாதுகாவலரும் உயிரிழந்தார்.

நேற்றுக் காலை 8.40 மணியளவில் கொழும்பு 'பேஸ் லைன்' வீதியில் தமது வாகனத்தில் வந்து கொண்டிருந்தபோது ரவிராஜ் ஆயுததாரிகளின் கொடூரத்துக்கு இலக்கானார்.

நேற்றுக் காலை 7 மணி முதல் 8 மணி வரை சிங்கள சேவையான 'தெரண ரிவி' நிகழ்ச்சி ஒன்றில் பங்குபற்றி விட்டு மனிங் டவுனில் உள்ள தமது வீட்டுக்குத் திரும்பிய ரவிராஜ் அங்கிருந்து பின்னர் தமது வழமையான சட்டத்தரணி கடமையைப் புரிவதற்காக நீதிமன்றுக்குத் தமது 'பிக்-அப்' வாகனத்தில் புறப்பட்டார்.


அச்சமயம் அவருடன் அவரது மெய்க்காவலரான லஷ்மன் என்ற சிங்களப் பொலிஸாரும் சிவில் உடையில் வாகனத்தின் முன் ஆசனத்தில் இருந்தார். வாகனத்தை ரவிராஜ் எம்.பியே செலுத்தினார்.

மாதா வீதி வழியாக வந்து 'பேஸ் லைன்' பிரதான வீதியில் அவரது வாகனம் ஏறியபோது அந்தத் துரதிஷ்டச் சம்பவம் நிகழ்ந்தது.

பிரதான வீதியில் வாகனத்தை நுழைப்பதற்காக அதன் வேகத்தை ரவிராஜ் குறைத்தபோதே வாகனத்தின் இரண்டு பக்கங்களிலும் சூடுகள் வீழ்ந்தன.

மெய்ப் பாதுகாவலர் பக்கம் சரமாரியாகச் சூடுகள் தீர்க்கப்பட்டதால்

[02ஆம் பக்கம் பார்க்க]



ரவிராஜ் எம்.பி. செலுத்தி வந்த அவரது வாகனம்.

## தீய சக்திகள் நடத்தும் கொலைகளால் உரிமைப் போராட்டத்தை நசுக்கமுடியாது

### சம்பந்தன் எம்.பி. காட்டம்



கொழும்பு, நவ.11

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.யான ரவிராஜின்படுகொலை பற்றிய உண்மைகளைக் கண்டறிய, அரசு சுதந்திரமான, பாரபட்சமற்ற சர்வதேச விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமிக்க முன்வர வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

தமிழரின் உரிமைக்காக அஞ்சாமல் குரல் கொடுத்து வந்தவர் ரவிராஜ். அந்த வீரக் குரலை அடக்கி ஒடுக்கும் நோக்குடனேயே இந்தப் படுகொலை நடந்திருக்கிறது. தீய சக்திகளின் இத்தகைய செயல்களால், தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை அடக்கி நசித்து விட முடியாது. அத்தகைய முயற்சி வெற்றியளிக்கப் போவதும் இல்லை என்றும் இரா. சம்பந்தன் தெரிவித்திருக்கிறார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் சக்திகளை திட்டமிட்டுக் கொலை: ஸ்ரீலங்கா அரசு பொறுப்பேற்க வேண்டும்

### அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன்



கிளிநொச்சி, நவ.11

மனிதாபிமானம் மற்றும் ஜனநாயக ரீதியில் குரல் கொடுக்கும் தமிழர் சக்திகள் திட்டமிட்டுப் படுகொலை செய்யப்படுவதை ஸ்ரீலங்கா அரசு பொறுப்பேற்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் படுகொலையைக் கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இதனைத் (08ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு., அம்பாறை மாவட்டங்கள் ஹர்த்தாலினால் செயலிழந்தன

மட்டக்களப்பு, நவ. 11

வாகரை, கதிரவெளி படுகொலைகளைக் கண்டித்து அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களின் தமிழ், முஸ்லிம் பிரதேசங்களில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இம்மாவட்டங்களில் ஹர்த்தால் காரணமாக இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. கடைகள் மூடப்பட்டிருந்தன. அரச அலுவலகங்கள், வங்கிகள், பாடசாலைகள் அனைத்தும் இயங்கவில்லை. வாகனப் போக்குவரத்து முற்றாக ஸ்தம்பித்திருந்தது. மக்கள் நடமாட்டமின்றி வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன.

(08ஆம் பக்கம் பார்க்க)

## வாகரைப் படுகொலை: அமெ. கவலை

கொழும்பு, நவ. 11

மட்டு., வாகரையில் அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டமை குறித்து அமெரிக்க வெளிவிவகாரத் திணைக்களம் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி திணைக்களம் நேற்றுச் செய்திக் குறிப்பு ஒன்றை விடுத்தது.

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஈனத்தனமான கொலை என ஜனாதிபதி பெரும் விசனம்



கொழும்பு, நவ.11

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. நடராஜா ரவிராஜின் கொலை கோழைத்தனமானது, ஈனத்தனமானது என்று கண்டித்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்தக் கொலையைப் புரிந்தவர்களைச் சட்டத்தின் பிடியில் சிக்கவைப்பதற்கு வேண்டிய சகல விசாரணைகளையும் உடன் ஆரம்பித்து அதன் முன்னேற்றங்கள் குறித்துத் தனது நேரடிக் கவனத்துக்குஅவ்வப்போது கொண்டு (08ஆம் பக்கம் பார்க்க)

## ரணிலும் கண்டனம்



கொழும்பு, நவ.11

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி., என். ரவிராஜ் சுட்டுக் கொல்லப்பட்டமையைத் தாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறார் என்றும், இது தொடர்பாக உடனடியாக சுதந்திரமான முறையில் விசாரணை நடத்திக் கொலையாளிகளைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் (08ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை கடலில் மோதல்

திருகோணமலை, நவ. 11

திருகோணமலை மாவட்ட நிலாவெளிக் கடற்பரப்பில் கடற்புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையே நேற்றுக் காலை 5.50 மணியளவில் மோதல் ஒன்று நடைபெற்றுள்ளது.

வெடிமருந்துகள் நிரப்பப்பட்ட விடுதலைப் புலிகளின் படகுகள் கடற்படையினரின் படகுகளைத் தாக்க முற்பட்ட வேளையில் கடற்படையினரால் மேற்கொண்ட தாக்குதலில் விடுதலைப் புலிகளின் 2 படகுகளும் தீப்பற்றி எரிந்த நிலையில் நீரில் மூழ்கடிக்கப்பட்டனஎன்று இராணு

(08ஆம் பக்கம் பார்க்க)

## படுகொலை விசாரணைக்கு 'ஸ்கொட்லண்ட் யார்ட்' உதவி

### விரைந்து கோர ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, நவ.11

ரவிராஜ் எம்.பி. படுகொலை தொடர்பான புலன் விசாரணைகளை நடத்துவதற்கு உதவுமாறு 'ஸ்கொட்லண்ட் யார்ட்' பொலிஸாரைக் கோருமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பணிப்புரை விடுத்திருக்கின்றார்.

இது தொடர்பாக அவசரக் கோரிக்கையை ஸ்கொட்லண்ட் யார்ட்டுக்கு விடுக்குமாறு வெளிவிவகார அமைச்சை ஜனாதிபதி பணித்திருக்கிறார் என ஜனாதிபதி அலுவலகச் செய்திக் குறிப்புத் தெரிவித்தது. அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நாட்டுக்கும், அரசுக்கும் வேண்டுமென்றே அபகீர்த்தியை ஏற்படுத்தும் உள்நோக்கம் இப்படுகொலையில் பொதிந்திருப்பது தோற்றுவதாக ஜனாதிபதி கூறுகின்றார்.

அத்தோடு அமைதியையும், சமாதானத்தையும் தேடி ஆவல் கொண்டுள்ள நாட்டில், இனங்க

(08ஆம் பக்கம் பார்க்க)

## ரவிராஜ் எம்.பியின் பூதவுடலை ஏ-9 ஊடாக எடுத்துவர முயற்சி

### செவ்வாயன்று சாவகச்சேரியில் இறுதிக்கிரியை

கொழும்பு, நவ.11

கொழும்பில் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் நடராசா ரவிராஜின் பூதவுடலை ஏ-9 வீதி ஊடாக அவரின் சொந்த இடமான சாவகச்சேரிக்கு எடுத்துவருவதற்கும் -

எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அங்கு அவரது இறுதிக்கிரியைகளை நடத்துவதற்கும்- முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

(08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரவிராஜ் எம்.பி.யின் படுகொலையை வன்மையாகக் கண்டிக்கின்றது ஈ.பி.டி.பி.

கொழும்பு, நவ.11

தமிழ்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் படுகொலை செய்யப்பட்டதை ஈ.பி.டி.பி. வன்மையாகக் கண்டித்துள்ளது.

கதிரவெளியில் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டமை மற்றும் ரவிராஜ் எம்.பி. படுகொலை செய்யப்பட்ட சம்பவம் ஆகியவற்றைக் கண்டித்து ஈ.பி.டிபி. வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்தக் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கதிரவெளியில் அகதி மக்கள் தங்கியிருந்த பாடசாலை மீது எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததில் அநியாயமாக கொல்லப்பட்ட 48 பொதுமக்களின் படுகொலைகளையும் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்த சம்பவத்தையும் ஈ.பி.டி.பி. ஆகிய நாம் மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

**பொதுமக்கள் படுகொலையை நியாயப்படுத்தி விடமுடியாது**

ஆயுதமேந்திய தரப்புகள் நடத்துகின்ற சண்டைகளில் அப்பாவிப் பொதுமக்கள் பலியிடப்படுவதை எதற்காகவும் அனுமதிக்க முடியாது. அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்படுவதற்குக் கூறப்படும் எவ்வித நியாயங்களையும் ஏற்றுக்கொள்ளமுடியாது. இதற்குக் காரணமானவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் கண்டனத்துக்குரியவர்களே.

இவ்வாறான படுகொலைகள் இடம்பெற ஏதுவாக, மக்களைக் கவசமாக வைத்துக் கொண்டு யுத்தம் நடத்துவதும் படுகொலை முயற்சியாகவே இருக்கும். ஆ வே, மக்களின் பாதுகாப்பு, அவலம் என்பவற்றுக்குத் தீர்வுகாண வேண்டிய நெருக்கடி மிகுந்த இக்கால கட்டத்தில் மக்கள் மீதான படுகொலைகள் வேதனை அளிக்கின்றது.

எனவே, அரசு பாதிக்கப்பட்ட மக்களுக்கும் பாதிப்புகளை எதிர்நோக்கியுள்ள மக்களுக்கும் உரிய உதவிகளை விரைந்து முன்னெடுக்க வேண்டுமென நாம் அரசாங்கத்தை கேட்டுக்கொள்வதோடு, அதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளோம்.

இதேவேளை, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் இன்று (வெள்ளி) காலை சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் கேட்டுப் பேரதிர்ச்சியடைந்தோம். அவர் மீதான படுகொலையை ஈ.பி.டி.பி. ஆகிய நாம் மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அமரர் ரவிராஜ் கொண்டிருந்த கருத்துகளும் கொள்கைகளும் எமது ஜனநாயகச் செயற்பாடுகளுக்கு முரணானதாக இருந்திருக்கலாம். அதற்காக அவர் கொண்டிருந்த கருத்தை அவர் வெளிப்படுத்தும் உரிமையுடையவர் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தோம்.

ஒருவர் கொண்டிருக்கும் கருத்துக்கள் அல்லது விமர்சனங்களை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் அற்றவர்களுக்கும் சகிப்புத் தன்மை அற்றவர்களுக்கும் படுகொலைகள் மீது நம்பிக்கையிருக்கும். கருத்துக்களை கருத்துக்களால் எதிர்கொள்ளத் திராணியற்று படுகொலைகளால் நசுக்க முற்படும் தீய சக்திகளாலேயே தமிழ் மக்களின் குரல்வளை தொடர்ந்து நசுக்கப்பட்டு வருகின்றது. இதன் தொடர்ச்சியாகவே இன்று ரவிராஜ் அவர்களுக்கும் பலி கொள்ளப்பட்டுள்ளார். இந்த மனித விரோதக் கொலையை ஈ.பி.டி.பி. வன்மையாகக் கண்டிக்கின்றது.

அவரின் இழப்பால்துயறுற்றிருக்கும் அவரின் குடும்பத்தார், உறவினர்களுக்கும் ஈ.பி.டி.பி. ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக்கொள்கின்றது.

கருத்துக்களை கருத்துக்களால் அல்லாமல் கருவி கொண்டு எதிர்கொள்ள முற்படும் அனைவரையும் ஒருமித்த குரலில் எதிர்ப்போம் - கண்டிப்போம் - என்று அதில் உள்ளது.

# பாஷையூர் மீனவர் இருதினங்களாக கடற்றொழிலுக்குச் செல்லவில்லை

## மீன் பிடிப்பதற்கு தூரக்கட்டுப்பாடு விதித்ததே காரணமாம்

நல்லூர், நவ.11

பாஷையூர் மீனவர்கள் கடந்த இரு தினங்களாக மீன்பிடிக்கச்செல்லவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று வெள்ளிக்கிழமையும் நேற்றுமுன்தினமும் இவ்வாறு மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லவில்லை எனத்தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, கரையில் இருந்து குறிக்கப்பட்ட தூரம் வரையே மீன்பிடிக்க அனுமதி வழங்கப்படுகின்றது எனவும் -

இதனால் குறிப்பிட்ட தூரத்தில் 300 முதல் 400 வரையிலான மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்வதாகவும் - சில சமயங்களில் பலரும் வெறுங்கையுடன் திரும்ப வேண்டிய நிலை ஏற்படுவதுண்டு என்றும் -கூறப்பட்டது.

தூரக்கு மீன் பிடிக்க அனுமதிக்கப்பட்ட நேரத்தில் அன்றாடச் செலவுகளுக்குகெனக் கூட மீன்களைப் பிடிக்க முடியாத நிலை இருப்பதாகவும் -

இதனாலேயே கடந்த இருதினங்களாக ௲ாம் தொழிலுக்குச் செல்வதை நிறுத்தியுள்ளதாகவும் பாஷையூர் மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (111)

## ரவிராஜ் எம்.பி. சுட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். சாரதி ஆசனத்திலிருந்த ரவிராஜின் சிரசை இரு சன்னங்கள் துளைத்தன.

**மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றனர்**

தாக்குதல் நடத்திய இனந்தெரியாத நபர்கள் இருவரும் உடனடியாக மோட்டார் சைக்கிள் ஒன்றில் ஏறித் தப்பிச் சென்றனர் எனக் கூறப்படுகின்றது. பின்னர் அப்பகுதியில் தேடுதல் நடத்திய பொலிஸார் ஆயுதங்கள் மற்றும் தோட்டாக்கள் அடங்கிய ஒரு பொதியையும், 'ஹெல்மெட்' ஒன்றையும் மீட்டனர்.

துப்பாக்கிச் சன்னங்கள் துளைத்த நிலையில் ரவிராஜும், அவரது மெய்க்காவலரும் உடனடியாகக் கொழும்பு தேசிய வைத்திய சாலைக்குக் கொண்டு விரையப்பட்டனர். அங்கு மெய்க் கா லர் ஏற்கனவே இறந்து விட்டார் என அறிவிக்கப்பட்டது.

தலையில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ரவிராஜ், சற்று நேரத்தில் இறந்து விட்டார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

ரவிராஜின் பூதவுடல் மரண விசாரணைகளை அடுத்து நேற்றுப் பிற்பகல் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. பின்னர் பூதவுடல் அந்தியகால சேவை நிலையம் ஒன்றுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

வாகரையில் அப்பாவித் தமிழ் அகதிகள் அரச படைகளின் ஈவிரக்கமற்ற - கொடூர - பீரங்கி மற்றும் ஷெல் தாக்குதல்களில் படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டித்து நேற்றுமுன்தினம் கொழும்பில் ஐ.நா. அலுவலகத்துக்கு முன்னால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் முழு மூச்சுடன் பங்குபற்றியவர் ரவிராஜ்.

1962 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் திகதி பிறந்த ரவிராஜ். யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரியில் பழைய மாணவர். இள வயதிலேயே தமிழர் விடுதலைக் கூட்டணியோடு தம்மை இணைத்தவர்.

1997 இல் யாழ். மாநகர சபைத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிட்டு பிரதி மேயரானார். பின்னர் பதில் மேயராகப் பணியாற்றினார்.

2001 இலும் 2004 இலும் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களில் வெற்றியீட்டி யாழ். மாவட்டத்தை நாடாளுமன்றத்தில் அவர் பிரதிநிதித்துவப்படுத்தினார். சிங்களம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மும்மொழிகளிலும் பேசவல்ல ரவிராஜ், நாடாளுமன்ற அரசியல் வாதிகள் மத்தியில் பெரிதும் மதிக் கப்பட்டவர். அவர்தமது மனைவியையும், இரு குழந்தைகளையும் விட்டுப் பிரிந்திருக்கின்றார். (உ)

## தீய சக்திகள் நடத்தும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் நடமாடும் சந்தடிமிக்க பகுதியில், பட்டப் பகலில் நடந்த இந்தக் கபடத்தனமான கொலைச் சம்பவத்தை மிக வன்மையாகக் கண்டித்து அறிக்கை விடுத்திருக்கும் இரா. சம்பந்தன் எம்.பி. அதில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

இன மோதல் பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வொன்றை எப்படியும் கண்டுவிட வேண்டுமென்று மிகவும் பற்றுறுதியோடு பாடுபட்டவர் ரவிராஜ் எம்.பி. வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்கள் அனுப வித்து வரும் அவலங்களுக்கு விடிவைப் பெறுவதற்காக அயராது உழைத்தும், மனித உரிமைகள் பேணப்பட வேண்டும் என்பதில் உறுதியாக நின்று அதற்காகவும் பாடுபட்டு வந்தார்.

இவரது இந்த அர்ப்பணிப்பான சேவை யும், விடா முயற்சியும் தமிழ் மக்கள் மத்தி யில் குறிப்பாக யாழ். மாவட்டத்திலுள்ள இவரது தொகுதியான தென்மராட்சி மக்கள் மத்தியில் இவருக்கு நல்ல மதிப்பையும், செல்வாக்கையும் பெற்றுத் தந்தது. நாடாளுமன்றத்திலும் இவர் பிரபலம் மிக்க உறுப்பினராகவிளங்கினார். இவரது இந்த அகால மரணம், தமிழ் கூறும் நல்லுலகிற்கும், தமிழர் உரிமைப் போராட்டத்திற்கும் ஏற்பட்டுள்ள ஒரு பேரிழப்பாகும்.

**தற்காப்புக் கவசத்துடனேயே கொலைகளைச் செய்கிறார்கள்**

கடந்த ஒரு வருட காலத்துக்குள் படுகொலை செய்யப்பட்ட எம்.பிக்களில் இரண்டாமவர் இவர். கடந்த நத்தார் தினத்தன்று மற்றொரு கூட்டமைப்பு எம்.பியான ஜோஸப் பரராஜசிங்கம், மட்டக்களப்பு கத்தோலிக்க தேவாலயத்துக்குள் வைத்துச் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந்தார். ஒரு வருட காலத்தில் படு கொலை செய்யப்பட்ட 2 எம்.பிகளில் இவர் முதலாமவர்.

இந்தப் படுகொலைகளைப் புரிந்தவர் கள், தங்களை யாரும் எதுவும் செய்ய மாட் டார்கள் என்ற ஒரு தற்காப்புக் கவசத்துடனேயே இத்தகைய செயல்களைத் துணிந்து செய்கிறார்கள். சட்டத்தின் கரங்கள் தங்கள் பக்கம் ஒருபோதும் நீளாது என்ற திடமான நம்பிக்கையும் இவர்களுக்கு உண்டு.

தேசியப் பிரச்சினை தொடர்பாக நடைபெறும் விவாதங்களில் ரவிராஜ் தயங் காது பங்குபற்றுபவர். மும்மொழிகளிலும் பேசக்கூடியவர் என்பதால், மும் மொழி விவாத அரங்குகளிலும் இவர் பங்கு பற்றி வந்தார். நாடாளுமன்ற விவாதங்களிலும் இவர் ஆர்வத்துடன் பங்குபற்று வார். உள்ளதை உள்ளபடி பேசுவதற்கு இவர் தயங்கமாட்டார். மற்றவர்களின் கருத்துகளுக்கு மதிப்பளித்தும் வந்தவர்.

அஞ்சா நெஞ்சம் படைத்த இவரது குரலை அடக்கி ஒடுக்குவதற்காகவே இவரை ஏதோ ஒரு சக்தி கொலை செய்திருக்கிறது.

தமிழர் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு எட்டப்படுவதை வன்மையாக எதிர்க்கும் தீய சக்தி ஒன்று இருந்து செயல்படு வதையே ரவிராஜ் எம்.பியின் கொலை நன்கு எடுத்துக் காட்டுகிறது. அந்தச் சக்தியே, தமிழர் உரிமைக்காகக் குரல் கொடுப் போரின் குரலை அடக்கி ஒடுக்குவதற்குத் திடம் பூண்டு இத்தகைய படுகொலைக ளைச் செய்கிறது. இத்தகைய செயல்கள் தொடருமானால் நாடு அராஜகத்துக்குத் தள்ளப்பட்டு விடும். ஆனாலும், தமிழர் உரிமைப் போராட்டத்தை எத்த கைய சக்தி யாலும் அடக்கி ஒடுக்கி விட முடியாது." - என்று தெரிவித்தார். (க)

## காவலரண் மீது குண்டுத்தாக்குதல்

உடுப்பிட்டி, நவ.11

பருத்தித்துறை ஓராம் கட்டை வட இந்து மகளிர் கல்லூரி வீதியில் உள்ள காவலரண் மீது நேற்றுமுன்தினம் காலை 8.40 மணியளவில் இனந்தெரியதவர்களால் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தின் போது சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என்று தகவல் ஒன்று தெரிவித்தது. (203-155)

## அளவெட்டியில் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், நவ.11

அளவெட்டி அருணோதயா கல்லூரிக்கு அருகில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இதே இடத்தைச் சேர்ந்தவரான இரண்டு பிள்ளைகளின் தந்தையான கந்தையா சிவநேசன் ((வயது - 48) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

வீட்டில் எவரும் இல்லாத வேளை இவர் தனிமையில் இருந்த போது வீட்டினுள் நுழைந்த இனந்தெரியாதவர்கள் இவரை சுட்டுக்கொன்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்குச் சென்ற மல்லாகம் பதில் நீதிவான் எஸ்.வசந்தசேனன் மரண விசாரணைகளின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (203)

## ஆங்கிலப் பயிற்சி பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,நவ.11

பலாலி ஆசிரிய கலாசாலையில் எதிர்வரும் 14ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த ஆங்கிலப் பயிற்சிநெறி பிற்போடப்பட்டுள்ளதாக கலாசாலை அதிபர் ரி.காங்கேசபிள்ளை தெரிவித்துள்ளார்.

ஏனைய கலாசாலைகளில் அதே தினத்தில் குறிப்பிட்ட பயிற்சிநெறி ஆரம்பிக்கப்படவில்லை என்றும் -

இதனையடுத்தே பயிற்சிநெறி பிற்போடப்பட்டுள்ளது என்றும் -

பயிற்சி ஆரம்பமாகும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார். (203)

## தலைமைத்துவப் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம்,நவ.11

வடக்கு - கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தால் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நடத்தப்படவுள்ள கிராமிய மட்ட தலைமைத்துவப் பயிற்சிநெறிகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை தொடக்கம் மூன்று தினங்கள் நடைபெறவுள்ளன.

பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் பிரதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலர் தா. தியாகமூர்த்தியும் -

இணைப்பாளராக பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுனேந்திரா சுதாகரும் கலந்துகொள்ளவுள்ளனர். (203)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 16 ★ 09 ★ 1974 மறைவு 12 ★ 10 ★ 2006

அமரர்
சண்முகம் மோகனகுமார்

உறவாடி வாழ்ந்திருந்த
உறவொன்று மறைந்தாலும்
நீ ம் எம் நினைவோடு
நீங்காமல் வாழ்ந்திருப்பீர்கள்.

தகவல்:
சண்முகம்(தந்தை),பற்றிம்மா(தாய்),
சங்கேஸ்வரி(மனைவி),ரசிகா(மகள்).

432/2, மடம் வீதி,
யாழ்ப்பாணம். (55132)

## தேவை

சஞ்சிகை நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

- ★ சந்தா முகவர்கள்
- ★ வெளிக்கள உத்தியோகத்தர்கள்
- ★ சஞ்சிகை விநியோகஸ்தர்கள்
- ★ விளம்பர முகவர்கள்

விண்ணப்பிக்க விரும்புவோர் தங்கள் சுய விவரக்கோவையுடன் நேரில் வரவும். விண்ணப்பப்படிவங்கள் பெற்றுக்கொள்ளும் இடங்கள்.

| | |
|---|---|
| P.M.C. 54/3, பருத்தித்துறை வீதி, நல்லூர் | 'பரஞ்சோதியம்' மருத்துவமனை இருப்பு 143, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் |

## மரண அறிவித்தல்

கந்தையா சிவநேசன்



பிரதான வீதி, அளவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவநேசன் 09.11.2006 வியாழக் கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை கந்தையா- நேசமலர் தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவமலர், சிவகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருநிறைச்செல்வனின் மாமனும் சரணியாவின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.11.2006)சனிக்கிழமை முற்கபல் 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் மல்லாகம் மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மகள், மருமகன்,
பேரப்பிள்ளை.

(55131)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகரையில் அகதிகள் மீதான தாக்குதலுக்கு சர்வதேச அமைப்புகள் கடும் கண்டனம்

கொழும்பு,நவ.11

மட்டக்களப்பு வாகரைப் பகுதியில் கடந்த புதன்கிழமை அகதிகளான அப்பாவிப் பொது மக்கள் மீது நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதல் சம்ப வத்தை சர்வதேச மன்னிப்புச் சபை உட்படப் பல்வேறு அமைப்புகளும் கண்டித்துள்ளன.

**சர்வதேச மன்னிப்புச் சபை**

மட்டக்களப்பில் இடம்பெயர்ந்த அப்பாவிப் பொதுமக்கள் தங்கியிருந்த முகாம்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில், 50 பொது மக்கள் பலியாகியதுடன், 100இற்கு மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்தனர் என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். உள்நாட்டு இனப்பிரச்சினையால் தமது சொந்த வீடுகளை இழந்து வெளியேற்றப்பட்டு இடம்பெயர்ந்த பொதுமக்கள் மீதான தாக்குதல் பயங்கரமானதாகும்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணை ஆணையம் அமைக்கப்படும் என்று இலங்கை அரசு அறிவித்த சில நாட்களிலேயே பாரிய அளவிலான பொதுமக்கள் மீதான தாக்குதலானது பெரும் அதிர்ச்சியையும், வருத்தத்தையும் அளிக்கின்றது. பொதுமக்கள் அநியாயமாகக் கொல்லப்படுவதும், காயப்படுவதும் ஏற்கமுடியாததொன்றாகும். இது தொடர்பாக இலங்கை அரசு உரிய முறையில் விசாரணையை மேற்கொள்ளவேண்டும். இந்தச் சம்பவங்களுக்குக் காரணமானவர்கள் நீதியின் முன் கொண்டுவரப்படவேண்டும்.

**பிரிட்டன் ஆழ்ந்த கவலை**

இலங்கை ஆயுதப்படைகளின் பீரங்கித் தாக்குதலில் அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்த சம்பவம் குறித்து பிரிட்டன் கவலை வெளியிட்டிருக்கின்றது.

''கிழக்கு இலங்கையில் நவம்பர் எட்டாம் திகதி இலங்கை ஆயுதப்படைகளின் பீரங்கித் தாக்குதலில் சிவிலியன்கள் உயிரிழந்து மற்றும் காயமடைந்த சம்பவங்களில் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து நாம் ஆழ்ந்த கவலையடைந்துள்ளோம்.

''இந்த நாட்டின் அண்மைக்கால சரித்திரத்தில் இந்தச் சம்பவம் ஒன்றும் புதுமையானது அல்ல. ஆனால், இந்தப் பிணக்கில் சிவிலியன்களே அடிக்கடி பாதிக்கப்படுகிறார்கள் என்பதை இது வெளிப்படுத்துகிறது'' - இவ்வாறு பிரித்தானிய தூதரகப் பேச்சாளர் கூறினார்.

**ஐ.தே.க. கண்டிக்கிறது**

வாகரையில் அப்பாவிப் பொதுமக்களின் உயிர்களைக் காவுகொண்ட தாக்குதல் சம்பவத்தை ஐ.தே.கட்சி வன்மையாகக் கண்டித்திருக்கிறது.

வாகரையில் கடந்த எட்டாம் திகதி பலரின் உயிர்களைப் பலிகொண்டு பாரிய சேதங்களையும் ஏற்படுத்திய துரதிர்ஷ்டவசமான இச்சம்பவத்தை ஐக்கிய தேசியக் கட்சி வன்மையாகக் கண்டிப்பதுடன், பாதிக்கப்பட்டோருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும், துயரத்தையும் தெரிவித்துக்கொள்கின்றது.

இச்சம்பவம் தொடர்பாக உடனடி முறைசார் விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் அரசை ஐ.தே.கட்சி வேண்டிக்கொள்கின்றது.

**மலையக மக்கள் முன்னணி**

வாகரைத் தாக்குதலில் அப்பாவி மக்கள் துடிதுடிக்கக் கொல்லப்பட்டுள்ளமை இனவாதிகளும் கண்டிக்கவேண்டிய விடயமாகும் என மலையக மக்கள் முன்னணியின் உபதலைவர் சட்டத்தரணி இராஜகுலேந்திரா தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தையின் ஊடாக யுத்தநிறுத்தம் ஏற்படும் என்ற நம்பிக்கை அற்றுப் போன பின்னர், நாட்டில் என்ன நடக்குமோ என்ற பீதியில் அனைவரும் உள்ளனர். அர்த்தமற்ற பிடிவதங்களினால் ஓர் இனம் மட்டுமல்ல முழு நாடுமே சீரழிந்துவருகின்றது. ஏ-9 பாதை திறக்கப்படாததால் பட்டினிச் சாவினை எதிர்பார்த்து மக்கள் நித்தமும் மரணிக்கின்றனர்.

இந்நிலையில் வாகரையில் அப்பாவிகள் மீது தாக்குதல் நடத்தியிருப்பது சமாதானத்தின் மீது இருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையையும் இல்லாமல் ஆக்குகின்றது.

சர்வதேச நாடுகள் இலங்கை சமாதான முயற்சிகளில் காட்டும் அக்கறையை எமது நாட்டவர்களினால் புரிந்துகொள்ளக் கூட முடியாமல் இருப்பதுதான் இன்றைய அவல நிலையாக உள்ளது.

ஆகவே சமாதானத்தை விரும்பும் அனைத்து சக்திகளும் ஒன்றிணைந்து இவ்வாறான மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளை எதிர்க்கவேண்டும். நடைபெறும் யுத்தத்திற்கான காரணத்தை தெரிந்துகொண்டும் வீம்புக்காக யுத்தத்தினை தொடர்ந்து கொண்டிருப்பது அப்பட்டமான சுயநல நடவடிக்கையாகவே அமையும்.

அதேநேரம் ஏ-9 பாதையை திறக்க வேண்டும் என அழுத்தம் கொடுத்து மனித நேயமுள்ள சிங்கள அமைப்புகள் மேற்கொள்ள உள்ள நடவடிக்கைகளை மலையக மக்கள் முன்னணி வரவேற்கின்றது. என்றும் சட்டத்தரணி இராஜகுலேந்திரா மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவரை கொழும்பில் காணவில்லை

கடந்த பதின்மூன்று வருடங்களாக கொழும்பு குணசிங்கபுரத்தில் வாழ்ந்து வந்தவரை வெள்ளை வானில் வந்தவர்கள் கடத்திச் சென்றுள்ளதாக யாழ்ப்பாணம் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அவரது சகோதரனினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நவாலி, அரசடி, மானிப்பாயைச் சேர்ந்த இராமச்சந்திரன் சுசிலகுமார் (வயது 32) என்பவரே கடந்த மாதம் 12ஆம் திகதி கடத்தப்பட்டுக் காணாமற்போயுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் நண்பர்களுடன் இரவு 8.30 மணியளவில் கதிரேசன் வீதியில் உள்ள சாப்பாட்டுக் கடைக்குச் செல்லும் போது கடத்திச் செல்லப்பட்டதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1-68)

* * *

கொழும்பில் மேசன் வேலைக்கெனச் சென்ற நான்கு பிள்ளைகளின் தந்தையை கடந்த ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி முதல் காணவில்லையென அவரது மனைவி யாழ். மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

தெல்லிப்பழை கூத்தபுலத்தைச் சேர்ந்த சடையன் பாலச்சந்திரன் (வயது 32) என்பவரே வேலை நிமித்தம் வெள்ளவத்தைக்குச் செல்லும்போது பம்பலப்பிட்டியில் வைத்து பொலீஸாரினால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என தகவல் கிடைத்துள்ளது என மனைவி தமது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார். (அ-1-68)

# புற்றுநோய் கதிர்வீச்சு சிகிச்சை மீண்டும்

தெல்லிப்பழை வைத்தியசாலையில் புற்றுநோய கதிர்வீச்சுச் சிகிச்சைப் பிரிவில் கடந்த புதன்கிழமை தொடக்கம் மீண்டும் சிகிச்சைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர்.கேதீஸ்வரன் இதனை அறிவித்துள்ளார்.

கதிர்வீச்சு இயந்திரத்தொகுதி தொழில்நுட்பக் கோளாறு காரணமாக செயலிழந்து இருந்தமையால் சிகிச்சைகள் நடைபெறாது இருந்தமை குறிப்பிடத்தக்கது. (203)

# சிவிலியன்கள் மீதான கண்மூடித்தனமான தாக்குதல்களை நிறுத்த ஐ.சி.ஆர்.சி. வற்புறுத்து

கொழும்பு,நவ11

இராணுவ மற்றும் சிவிலியன்கள் இலக்குகளை வித்தியாசப்படுத்தி கண்மூடித்தனமான தாக்குதல்களைத் தவிர்த்து, எல்லாத் தருணங்களிலும் சிவிலியன்களை மதிக்கவேண்டும், அவர்களைப் பாதுகாக்க வேண்டும். இதனை இரு தரப்புகளும் நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டும்.

இவ்வாறு செஞ்சிலுவைக்குழு, வாகரைத் தாக்குதல் குறித்து நேற்றுமுன்தினம் விடுத்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வாகரையின் கரையோரப் பிரதேசமான கதிரவெளியில் ஆயிரக்கணக்கான இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த பகுதியில் நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் அப்பாவிகள் கொல்லப்பட்டது குறித்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கவலை தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசாங்கப் படையினருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் மோதல்கள் நடைபெற்று வருகின்றன.

இந்த இரண்டு தரப்புகளும் சர்வதேச மனிதாபிமான சட்டத்தை மதித்து நடக்க வேண்டும் என்று இத்தருணத்தில் நினைவூட்ட விரும்புகிறோம்.

மறுதரப்பினர் நடத்தக்கூடிய தாக்குதல்களில் இருந்து பொதுமக்களை காப்பாற்றுவதற்கான இயலக்கூடிய முன்னேற்பாடுகளை செய்யவேண்டும்.

இடம்பெயர்ந்த மக்களின் சுதந்திரமான நடமாட்டத்தை மதிக்கவேண்டும் என்றும் இரண்டு தரப்புகளையும் கேட்டுக்கொள்கிறோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - வாகரைத் தாக்குதலில் மரணமான, காயமடைந்த பொதுமக்கள் சேர்க்கப்பட்ட ஆஸ்பத்திரிக்கு ஆறு அம்புலன்ஸ்கள் மற்றும் பஸ்கள், டிரக் வண்டிகளில் சென்ற செஞ்சிலுவைக் குழுவின் அணி காயமடைந்தவர்களை அரசாங்கக் கட்டுப்பாட்டில் உள்ள வாழைச் சேனை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றது. பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதற்காக மற்றோர் அணி நேற்றுமுன்தினம் வாகரைக்குச் சென்றது. (அ)

# 7 தமிழ்ச் சிறுவர்கள் வியாழனன்று கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர்

## கதிரவெளியில் ஆயுதப் பயிற்சி பெற்றவர்களாம்

கொழும்பு, நவ.11

வாகரை, கதிரவெளி, உதயபுரம் பகுதியில் உள்ள புலிகளின் பயிற்சி முகாமில் ஆயுதப் பயிற்சி பெற்றவர்கள் எனத் தெரிவித்து - உரிய வயதை எட்டாத - ஏழு சிறுவர்களை பயங்கரவாத விடயங்களை விசாரிக்கும் பொலிஸ் பிரிவு அதிகாரிகள் நேற்று கொழும்பு மேலதிக நீதிவான் மஞ்சுளா திலகரட்ண முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

செல்வராஜா டிலூஜன், செல்வராஜா ஹரிசங்கர், சந்திரன் சுரேஷ், சின்னத்தம்பி யோகராஜா அன்பழகன், கந்தையா காந்தி கணேசன், சிவலிங்கம் காண்டீபன், யோகேந்திரன் திலகரட்ணம் ஆகியோரே ஆஜர் செய்யப்பட்டவர்களாவர்.

சில வாரங்களுக்கு முன்னர் சேருநுவர, கல்லாறு வீதித்தடை நிலையில் வைத்து சேருநுவரப் பொலிஸார் இவர்களைக் கைது செய்து பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரிடம் கையளித்தனர் என்று கூறப்படுகின்றது.

இவர்கள் கதிரவெளி, உதயபுரத்தில் உள்ள புலிகளின் பயிற்சி முகாமில் ஏனைய 85 பேரோடு சேர்ந்து ஆயுதப் பயிற்சி பெற்றவர்கள் என்றும் -

உரிய பராயம் அடையாத இச்சிறுவர்கள் நீதிமன்றத்துக்கு வாக்குமூலம் அளிக்கத் தயாராக இருக்கின்றனர் என்றும் -

இவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்த பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும், வாக்குமூலங்களைப் பதிவு செய்வதற்கு உரிய மொழி பெயர்ப்பாளர்கள் வசதி இல்லாததால் இந்த விடயத்தை நீதிமன்றம் ஒத்திவைத்தது. (உ)

# ஐ.நா. சபையின் உச்சி மாநாட்டில் தமிழர் அமைப்பும் பங்குபற்றியது

போலந்து நாட்டின் தலைநகரான வாசோவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் 'மோசடிகளுக்கு எதிரான, நல்ல அரசுகளுக்கும் மனித உரிமைகளுக்குமான உலக உச்சி மாநாட்டில் 'அரச சார்பற்ற நிறுவனங்களில் ஒன்றாக, ஐக்கிய நாடுகள் சபையின் மாநாட்டிற்கான அங்கீகாரத்துடன் 'பிரான்ஸ் தமிழர் மனித உரிமைகள் மையம்' பங்கேற்றுள்ளது.

இந்த மாநாட்டில் பங்கேற்ற தமிழர் மனித உரிமைகள் மையத்தின் பிரதிநிதிகள், மாநாட்டின் தலைவருக்கும், ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் திருமதி லூயிஸ் ஆபார் மற்றும் மாநாட்டில் பங்கேற்ற முக்கிய பிரதிநிதிகளுக்கும் ஒரு விண்ணப்பத்தையும், புள்ளி விவரங்கள் அடங்கிய அறிக்கையையும் கையளித்தனர்.

தமிழர் மனித உரிமைகள் மையத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட இந்த விண்ணப்பம் மற்றும் அறிக்கையில், ஸ்ரீலங்காவில் நடைபெறும் மோசடிகள், ஊழல்கள், லஞ்சம் ஆகியவற்றுடன் மோசமான மனித உரிமை மீறல்கள் ஆகியவையும் புள்ளிவிவர ஆதாரத்துடன் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன. அத்துடன், பல சகாப்தங்களாக எந்தவிதத்திலும் ஒரு நல்ல அரசாக ஸ்ரீலங்கா செயற்படவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

தமிழர் மனித உரிமைகள் மையத்தினால் தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கையில் வடக்கு - கிழக்கில் உள்ள தற்போதைய நிலைமைகள் ஆதாரங்களுடனும், புள்ளிவிவரங்களுடனும் தொகுக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழர் மனித உரிமைகள் மையம், கடந்த வருடம் நவம்பர் மாதம் ஆபிரிக்காவில் உள்ள ருனிசியாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் 'தகவல் சமுதாய' உலக உச்சி மாநாட்டிலும்', 2001ஆம் ஆண்டு தென் ஆபிரிக்காவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் 'இன வேறுபாடுகளுக்கான மாநாட்டிலும்', 1993ஆம் ஆண்டு ஆஸ்திரியாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் 'இரண்டாவது உலக மனித உரிமைகள் மாநாட்டிலும்' பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# 89இல் படுகொலைகள், கடத்தல்களை எதிர்த்தவர் இன்று வாளாவிருப்பது ஏன்?

## ஜனாதிபதி மஹிந்தவை நோகிறார் விக்கிரமபாகு

கொழும்பு, நவ.11

1989ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இடம்பெற்ற மிக மோசமான படுகொலைகள் மற்றும் ஆட்கடத்தல்கள் போன்ற சம்பவங்களுக்கு எதிராகக் கடுமையாகப் போராடிய மஹிந்த ராஜபக்ஷ, தற்போது ஜனாதிபதியான பிறகு, அவரது ஆட்சியில் நடைபெறும் அவ்வாறான சம்பவங்களைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்காதது ஏன்?

இவ்வாறு காணாமற்போனோரைத் தேடியறியும் குழு நேற்று கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்குழுவின் போசகர் விக்கிரமபாகு கருணாரட்ண கேள்வி எழுப்பினார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:-

நாட்டில் தற்போது நிலைமை மோசமாகியுள்ளது. நாட்டின் வடக்கு - கிழக்கிலும் கொழும்பிலும் ஆட்கடத்தல்களும் படுகொலைகளும் பெருகி வருகின்றன. மட்டக்களப்பு வாகரையில் மக்கள் குண்டுபோட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் நாடு முழுவதும் ஆட்கள் கடத்திச் செல்லப்படும் சம்பவங்களுக்கு எதிராக எமது அமைப்பு கடுமையாகப் போராடி வருகின்றது. கடத்தப்பட்டவர்களின் உறவினர்களும் எம்முடன் இணைந்து செயற்படுகின்றனர்.

ஆட்கடத்தல் நடவடிக்கைகளுக்கு எதிராக இம்மாதம் முதலாம் திகதி கொழும்பில் நாம் போராட்டம் ஒன்றை நடத்தினோம். இதன் காரணமாக இப்பிரச்சினை சர்வதேசமயமாக்கப்பட்டுள்ளது. அரசு அதற்குப் பதில் கூற முடியாது தடுமாறுகிறது.

உயர் பாதுகாப்பு வலயத்திற்குள்ளேயே ஆட்கள் கடத்தப்படுகின்றனர். சம்பந்தப்பட்டோர் - பொறுப்பானவர்கள் - இதற்குப் பதில் சொல்லியே ஆகவேண்டும்.

கடத்தல் சம்பவம் தொடர்பாக அண்மையில் கொட்டாஞ்சேனைப் பகுதியில் கைது செய்யப்பட்டவர் தன்னை யாரெனக் கூறியுள்ளார். அவருக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

அநுராதபுர வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற சென்ற ஒருவரைப் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த ஒருவர் சுட்டுக்கொன்றுள்ளார்.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக இலக்கத்தகடு இல்லாத ஓட்டோவில் சிவில் உடையில் பொலிஸார் தமிழ் இளைஞர்களைச் சோதனை செய்துள்ளனர். எமது அங்கத்தவர்கள் அப்பொலிஸாரை விசாரித்தபோது அவர்கள் நழுவிவிட்டனர். இதற்கான ஆதாரம் எம்மிடம் உண்டு.

தற்போது கொலை மற்றும் ஆட்கடத்தல் போன்ற சம்பவங்களை விசாரணை செய்வதற்காக ஜனாதிபதியால் விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் என்ன என்பதை அரசு விளக்கவேண்டும்.

1989களில் இடம்பெற்ற ஆட்கடத்தல் போன்ற சம்பவங்களை இப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அப்போது எம்முடன் இணைந்து எதிர்த்தார். இப்போது இந்தச் சம்பவங்களைத் தடுப்பதற்காக அதிகாரம் இருந்தும் ஏன் அவர் மௌனமாக இருக்கிறார் என்பது தெரியவில்லை - என்றார். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீற்றவன் நாவலின் கதைச்சுருக்கம் - விளக்கம் - விமர்சனம்



எல்லாவகை இலக்கியங்களும் படைத்த
காலபூசணம்
**அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை**
எழுதியது இரண்டாம் பதிப்பு

(55118)

ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி,புத்தூர்
பவளவிழாச் சபை நடத்தும்
பதவி ஓய்வுபெற்ற **அதிபர் திரு.வ.ஆறுமுகம்**
அவர்களின்
**சேவை நயப்பு விழா**

இடம் : கல்லூரி பிரதான மண்டபம்
காலம் : 12.11.2006 ஞாயிறு காலை 8.45 மணி
தலைவர் : திரு.கு.வாகீசன்(பிரதிஅதிபர்)

நிகழ்வின் நிரல்
* புத்தூர் சிவன் கோயிலில் இடம்பெறும் விசேட பூசையைத் தொடர்ந்து கல்லூரி மண்டபம் வரை வரவேற்பு ஊர்வலம்
* நிறுவுநர் திருவுருவ வழிபாடு
* மங்கல வாத்தியம்
* மங்கல விளக்கேற்றல்
* இறைவணக்கம் : திரு.கா.கனகசிங்கம்
* அகவணக்கம்
* வரவேற்புரை : திரு.ச. லலீசன் *(பொருளாளர், பவள விழாச் சபை)*
* ஆசியுரை : சிவஸ்ரீ சாமி. சோமசுந்தரக் குருக்கள் *(பிரதம குரு, விசுவநாதப் பெருமாள் தேவஸ்தானம்)*
  ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் *(நல்லை ஆதீன முதல்வர்)*
* தலைமையுரை
* வாழ்த்துரை
  • திரு.வே.தி.செல்வரத்தினம் *(வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாண வலயம்) (தலைவர், கல்லூரித் தர்மகர்த்தா சபை (பதவி வழி)*
  • திரு. இ.சிவஞானசுந்தரம் *(கோட்டக் கல்விப் பணிப்பாளர்,கோப்பாய்)*
  • திரு. S.R சண்முகரத்தினம் *(முன்னாள் அதிபர்)*
  • திரு. ச.கனகராசா *(முன்னாள் அதிபர்)*
  • திரு. வே.சந்திரசேகரம்பிள்ளை *(முன்னாள் அதிபர்)*
* சோமாஸ்கந்தன்(2006)

**ஆறுமுகம் சிறப்பு மலர் வெளியீடு**
மதிப்பீட்டுரை : சிவஸ்ரீ ப.சிவானந்தசர்மா *(கோப்பாய் சிவம்)*
* நயப்புரைகள்
  • மாணவன் சார்பில் செல்வன் கீ.வாகீசன் *(சிரேஷ்ட மாணவ முதல்வர்)*
  • நலன்புரிக் கழக சார்பில் திரு.சு.மோகனராசன் *(தலைவர், நலன்புரிக் கழகம்)*
  • தர்மகர்த்தா சபை சார்பில் திரு.ம.சத்தியபாலன்
  • பழைய மாணவர் சங்கம் சார்பில் திரு.க.இராசதுரை *(செயலாளர், பழைய மாணவர் சங்கம்)*
  • பாடசாலை அபிவிருத்திச் சங்கம் சார்பில் திரு. வே.தர்மலிங்கம் *(செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்)*
  • முன்னாளர் ஆசிரியர் சார்பில் திரு.S.தியாகராசா *(உதவிக் கல்விப் பணிப்பாளர்)*
  • பவள விழாச் சபை சார்பில் திரு.அ.க.த.கிருஷ்ணராஜா *(உப தலைவர், பவள விழாச் சபை)*
* கௌரவிப்பு
* ஏற்புரை: விழா நாயகர்
* நன்றியுரை: திரு.செ.கிருபாகரன் *(கணக்காளர் பிரதேச செயலகம், கரவெட்டி)*

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். - **பவள விழாச் சபை**

## 31 ஆம் நாள் சபிண்டீகரண நினைவஞ்சலி

*தாயின் மடியில்* 11 . 05 . 1962



*ஆண்டவன் திருவடியில்* 12 . 10 . 2006

**அமரர் ஜெ.ஜெயவதனி**

*ஆண்டு விஜ வருஷ புரட்டாதித் திங்கள்*
*ஆண்ட தேய்பிறை சஷ்டித் திதியதனில்-வேண்ட*
*பேர் விளங்கும் ஜெயவதனி மண்ணுலகைவிட்டு*
*கார் கூந்தல் நாகபூசஷணியம்மனடி சேர்ந்தாள் இன்று*
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இல. 38, முதலாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (55725) - **குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியை
**திருமதி சிவமலர் திருநிறைச்செல்வன்**
அவர்களின் பாசமிகு தந்தை
**திரு.சிவநேசன்**

அவர்கள் இறைபதம் அடைந்தமையை அறிந்து மனம் வருந்துகின்றோம்.
அமரரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை. **கல்லூரிக் குடும்பம்**

## கோப்பாய் பகுதியில் பன்றிகளால் தொல்லை

அரியாலை,நவ.11

கோப்பாய், நீர்வேலிப் பகுதிகளில் உள்ள விவசாய நிலங் களில் காட்டுப்பன்றிகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக விவ சாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் நிலங்களில் பயிரிடப்பட்ட மரவள்ளி, கருணை போன்றவற்றை பன்றிகள் கிளறிச் சேதப்படுத்தி வருகின்றன.

இதனால் பெருமளவான பயிர்கள் நாசமடைந்து வருகின் றன என்று விவசாயிகள் கூறியுள்ளனர். இவ்வாறு தோட்டங்களுக் குள் புகுந்து அட்டகாசம் செய்யும் பன்றிகளைப் பிடிப்பதற்கு விவசாயிகள் காவல் இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. (203-17)

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

*மண்ணில்* 25 * 04 * 1929



*விண்ணில்* 11 * 11 * 1996

*அமரர்* **எட்வேட் இராசரத்தினம் ஆசீர்வாதம்**
(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்)

**"உயிர்ப்பும் உ[illegible]ம் நானே - என்னில்**
**விசுவாசம் கொ[illegible] இறப்பினும் வாழ்வான்."**

ஆண்டுகள் [illegible] சென்றாலும்
ஆற[illegible]லை எம்துயர் அன்புக் கணவரே
ஆருயிர் பப்பா, நேசத் தாத்தா,
பாரினில் எங்ஙனம் உமை மறப்போம்.
பரமனை வேண்டி நின்றோம்
பரகதியை உன் ஆன்மா அடைந்திடவே

*41, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம்.*

*தங்கள் பிரிவால் துயறுரும்:*
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(55127)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

*தோற்றம்* 05 . 09 . 1927



*மறைவு* 12 . 10 . 2006

**அமரர் இராசரத்தினம் இரத்தினவேல்**

*எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு*
*மீளாத் துயில் கொண்ட எம் தந்தைக்கு இதய அஞ்சலி*

அன்னாரின் பிரிவுத் துயரில் எம்முடன் பங்கு கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*அரச வீதி,*
*உரும்பிராய்.* (55123) - **குடும்பத்தினர்.**

## கண்ணீரில் கரைந்த ஓராண்டும் 10ஆவது ஆண்டு பிறந்தநாள் நினைவலைகளும்

*மொட்டாக* 29 . 11 . 1996



*உதிர்வாக* 11 . 11 . 2005

**தேவராஜா - கிருஷிகா** (அம்மன்)

(யா உடுப்பிட்டி மகளிர் கல்லூரி தரம் 4 மாணவி)

சந்ததிக்கு ஏங்கிய நாம் சந்தனத்தேர் உன் வரவால்
நந்தவனக் கனவுகளில் நடைபயில "அம்மன் நீ"
சொந்தத்தை விட்டேவோ? சொல்லாமல் போய்விட்டாய்
வெந்தமனம் வேகியழ விம்மல் ஒலி மீட்டுகிறோம்
கண்ணீரில் மிதந்துநிதம் கனக்கிறது உந்தன் முகம்
என்முன்னை எழில்நிலவே எப்பிறப்பில் இனிக் காண்போம்
உன் அமைதித்திருவதனம் விழிகளுக்குள் வீற்றிருக்க
பொன்மகளே கிருஷிகா! எங்களுக்கு ஏது உறக்கம்?

*உன்னையிழந்து வாடி நிற்கும்;*
அப்பா,அம்மா, அப்பம்மா, அம்மம்மா, பெரியமாமா குடும்பம், சித்தி குடும்பம், சின்னமாமா, பெரியப்பா குடும்பம், மாமி குடும்பம்.

*உடுப்பிட்டிச் சந்தி,*
*உடுப்பிட்டி.* (54932)

## 28ஆவது ஆண்டு நினைவலைகள்



(54931)

**சிவசம்பு நவரத்தினம்**
(Foreman, Asbestos Cement Industries Ltd. Colombo.)

| *மொட்டாக* | *உதிர்வாக* |
|---|---|
| 19.02.1937 | 18.02.1977 |

**ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

[illegible],
உடுப்பிட்டி. **குடும்பத்தினர்.**

### தவறிவிட்டது

சங்கானைக்கும்- பண்டத்தரிப்புக்கும் இடையில் திருச்செல்வம் யேசுதாசன் [NIC NO822344445v] அம்மன் வீதி, பண்டத்தரிப்பு என்பவருடைய தேசிய அடையாள அட்டை தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

**The 55th Annual Festival Of Carols**
**By**
**The Youth of the North**
**at**
**The Grace Hensman Memorial Hall**
**Chundikuli Girls' College Jaffna.**
**on**
**Saturday 11th November 2006**
**at**
**10 a.m**
**Admission by Programme**
**Rs 15/=**

### குத்தகைக்கும் விற்பனைக்கும்

யாழ்ப்பாணத்தில் 20 வருடங்களுக்கு மேல் இயங்கி வந்த மருந்து விற்பனை ஸ்தாபனம் கைமாற்றிக் கொடுக்கப்படும். மருந்துப் பொருள்களும் மொத்தமாக விற்கப்படும். வீட்டுத் தளபாடங்கள் LML ஸ்கூட்டர், TV, பிறிச் என்பனவும் விற்பனைக்குண்டு.
**தொடர்பு: 7892**

### இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட Brown Paper bag மலிவு விலையில்

சகல அளவுகளிலும் Brown Paper bag மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள.
ஸ்ரீலங்கா புத்தகசாலை.
*தொ.பே 222 2573* இல.234, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
(சி/51301)

## மரண அறிவித்தல்

**சின்னத்தம்பி அப்பையா**
(பிரபல புகையிலை வியாபாரி)



கொக்குவிலைப் பிறப்பிடாகவும், இணுவில் கிழக்கு காரைக்கால் சிவன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி அப்பையா 09.11.2006 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் இந்திரராணி (இந்தியா), சோதிலிங்கம்(அபிராமி பெஷன் கவுஸ்-சுன்னாகம்), புஸ்பலிங்கம் (கனடா), புஸ்பராணி, சண்முகலிங்கம் (இந்தாலி), யோகராணி,கணேசலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தியாகராசா, கிருஷ்ணாம்பாள், நவரத்தினராசா(சுவிஸ்), வீரசிங்கம் (சுவிஸ்), சிவமலர் (கனடா), ஒபிலியா (நீர்கொழும்பு), ரஜனி (சுவிஸ்) ஆகியோரின் மாமனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, கந்தையா, வியாழப்பிள்ளை, தர்மலிங்கம், செல்லமுத்து, பூரணம், பொன்னம்மா, பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் மதியாபாரணம் (வளர்மதி புடைவை), லயன் இலகுநாதன் (தலைவர்-கமநல கேந்திர நிலையம், உடுவில்), ராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் தவராசா -சந்திரிகா (பிரான்ஸ்), வரதராசா-தர்ஷினி (சுவிஸ்), வனிதா-நடேசலிங்கம் (கனடா), ஆனந்தன்-ஜெயா (பிரான்ஸ்), சுதா-கிருஸ்ணகுமார், குகராஜா, விஜிதா (இந்தியா), தயாளினி-கருணாகரன் (கனடா), ஷயந்தி-அனுசீலன்(கனடா), றஜிதா (இந்தியா), யசிந்தா, சிவரூபன் (விரிவுரையாளர்-பேராதனைப் பொறியில் பீடம்), கோகிலவதனி(யாழ்.பல்கலை நுண்கலைப் பீடம்), ஜெகன்(இத்தாலி), கோகிலப்பிரியா (இந்தியா), நீதன் (கனடா), கஜன் (கனடா), கிரி (கனடா), யசிந்தா (யா/இ/ம/க), விஜிதரன் (யா/இ/ம/க), சிந்துஜன் (Negombo International School), சபீனன் (சுவிஸ்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.11.2006 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காரைக்கால் சிவன் கோயிலடி,
இணுவில் கிழக்கு,
இணுவில்.
தொ.பே 021 4591921

*தகவல்,*
**பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் மருந்து வகைகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது

யாழ்ப்பாணம்,நவ.11

குடாநாட்டில் அத்தியாவசிய மருந்துப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் நோயாளர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

சில கடைகளில் பனடோலுக்குக் கூடத் தட்டுப்பாடு நிலவுகின்றது. அத்துடன் விலையும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

வைத்தியசாலைகளில் சிகிச்சைகளின் பின்னர் எழுதிக் கொடுக்கப்படும் மருந்து வகைகளை வெளி இடங்களில் பெற்றுக்கொள்ள முடியாது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இப்போது மருந்துக்கடைகளில் சில மருந்துகள் அறவே இல்லாத நிலைமை காணப்படுகின்றது.

சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவருக்கும் தேவையான மருந்து வகைகள் எதுவுமே இல்லாத நிலையே அநேக கிராமங்களில் காணப்படுகின்றது. (203-79)

# மருதங்கேணியில் கடமைபுரிந்து இடம்பெயர்ந்த கல்வியாளருக்குச் சம்பளம் வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.11

இடம்பெயர்ந்து தற்காலிக இடத்தில் இயங்கி வரும் மருதங்கேணி கோட்டப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்களுக்கான சம்பளங்களை உடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கு மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒகஸ்ட் மாதம் முதல் குடாநாட்டில் நிலவிவரும் அசாதாரண சூழ்நிலை காரணமாக மருதங்கேணி கோட்டத்தைச் சேர்ந்த 11 பாடசாலைகள் இடம்பெயர்ந்து கிளிநொச்சி வலயத்தில் இயங்கிவருகின்றன.

அங்கு பணியாற்றிய அதிபர், ஆசிரியர் உட்பட 48 பணியாளர்களுக்கு அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு இடம்பெயர்ந்த பின்னர் இதுவரை சம்பளம் வழங்கப்படவில்லை.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ஆவணி மாத முற்பணமாக தலா 10 ஆயிரம் ரூபாவை வழங்கியிருந்தார். அதன் பின்னர் எந்தவிதக் கொடுப்பனவும் வழங்கப்படவில்லை.

எனவே அசாதாரண சூழ்நிலை நிலவுகின்ற இந்நேரத்தில் சம்பளத்தை உடன் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பாதிக்கப்பட்ட பணியாளர்கள் கையெழுத்திட்டு வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சருக்கு மகஜர் அனுப்பிவைத்துள்ளார். (202)

# டெங்கு நோயைப் பரப்புகின்ற நுளம்பின் பெருக்கம் அதிகரிப்பு

## கட்டுப்படுத்த உதவுமாறு கோருகிறார் சுகாதாரப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம்,நவ.11

குடாநாட்டில் டெங்கு நோயைப் பரப்பும் நுளம்பின் பெருக்கம் அதிகரித்துள்ளது. அதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் உடனடியாக முழுவீச்சில் முன்னெடுக்க வேண்டும்.

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் இவ்வாறு அறிவுறுத்துகிறார்.

இதுதொடர்பாக அவர் அறிவுறுத்தல் ஒன்றை விடுத்துள்ளார். அந்த அறிவுறுத்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.மாவட்டத்தில் சில நோயாளர்கள் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருப்பது இனங் காணப்பட்டுள்ளது. தற்போது பெய்வரும் மழைக்குப் பின்னர் டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்ததால் இங்கும் டெங்கு நோய் தீவிரமாகப் பரவி பலத்த தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

டெங்கு நோயைப் பரப்பும் அதே நுளம்பினால் பரவும் சிக்கன் குனியா நோய் தமிழ் நாட்டில் பரவி வருகின்றது. இந்நோயை ஒத்த ஒரு வகை வைரஸ் காய்ச்சல் மன்னார் மாவட்டம் உட்பட பல மாவட்டங்களில் பரவியுள்ளது. இது சிக்கன் குனியா நோய் தானா என இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை. யாழ்.மாவட்டத்திலும் எந்நேரத்திலும் இந்நோய் பரவ சாத்தியம் உண்டு என கருதமுடியும்.

ஆகையால் டெங்கு நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை உடனடியாக முழு வீச்சில் முன்னெடுக்க வேண்டும். இதற்கு பல்வேறு திணைக்களங்கள், நிறுவனங்கள், உள்ளூராட்சி மன்றங்கள், பாடசாலைகள், அரசசார்பற் நிறுவனங்களின் ஒத்துழைப்பு மிக அவசியம். - என்றுள்ளது. (202)

# அடிப்படை வசதிகளின்றி இயங்கும் நவாலி புலவர் முகாம் முன்பள்ளி

நவாலி,நவ.11

நவாலி புலவர் முகாம் சிறுவர் பாடசாலை அடிப்படை வசதிகளின்றி இயங்கி வருகின்றது. இதனால் அங்கு கல்வி பயிலும் மாணவர்கள் அசௌகரியங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நவாலி புலவர் முகாமில் உள்ள சிறுவர்களுக்கென அங்கு சிறுவர் பாடசாலை ஒன்று இயங்கிவருகின்றது. அங்கு மலசலகூட வசதி, குடிதண்ணீர் வசதி போன்றவை செய்து கொடுக்கப்படாததால் சிறுவர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க அரசார்பற்ற நிறுவனங்களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் முன்வர வேண்டும் என பெற்றோர் கோரிக்கை விடுக்கின்றனர். (202-100)



ஜனசக்தி காப்புறுதி நிறுவனம் தனது ஆயுள் காப்புறுதி வாடிக்கையாளராகிய சபாநாத சர்மாவின் இழப்பீட்டுத் தொகையான 5 லட்சம் ரூபாவை அவரின் மனைவி திருமதி ச.சந்தான லட்சுமியிடம் கடந்த திங்கட்கிழமை வழங்கியுள்ளது.

மேற்படி கொடுப்பனவை நிறுவனத்தின் யாழ்.மாவட்ட முகாமையாளர் ஜேசன் ஜெயகுல ராஜா வழங்கினார். அருகில் யாழ். கிளைப் பொறுப்பதிகாரி பா.சுதாகரன் மற்றும் உதவி முகாமையாளர் வி.எஸ்.சர்மா ஆகியோரும் காணப்படுகின்றனர்.

# மண்ணெண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம்,நவ.11

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் மூலம் மண்ணெண்ணெய்யை இதுவரை பெறாதவர்களுக்கு இன்று சனிக்கிழமை விநியோகம் நடைபெறவுள்ளது.

இன்று மண்ணெண்ணெய் பெறாதவர்களுக்கு மீண்டும் விநியோகம் செய்யப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விநியோகம் இடம்பெறவுள்ள கிராம சேவர் பிரிவுகளின் விவரம் வருமாறு-

நெடுங்குளம்(ஜே/61), கொழும்புத் துறை கிழக்கு (ஜே/62), கொழும்புத்துறை மேற்கு (ஜே/63), பாஷையூர் கிழக்கு (ஜே/64), பாஷையூர் மேற்கு(ஜே/65), ஈச்சமோட்டை (ஜே/66), திருநகர்(ஜே/67), நாவாந்துறை தெற்கு(ஜே/84), நாவாந்துறை வடக்கு(ஜே/85), சோனகதெரு(ஜே/86), சோனகதெரு வடக்கு (ஜே/87), புதிய சோனகதெரு(ஜே/88), தற்காலிக குடும்பங்கள். (203)

# உலகில் அமைதி வேண்டி சாயி நிலையங்களில் பஜனை

யாழ்ப்பாணம்,நவ.11

யாழ்.பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணி வரை அகண்ட பஜனை இடம்பெறவுள்ளது.

உலகம் முழுவதும் சாந்தியும் அமைதியும் நிலவவேண்டி 175 நாடுகளிலுமுள்ள ஆயிரக்கணக்கான சாயி நிலையங்களில் ஒரே நேரத்தில் 24 மணி நேர பஜனை நடைபெறவேண்டுமென சத்திய சாயி பாபா அறிவுறுத்தியதை அடுத்து இந்த பஜனை இடம்பெறுகிறது. (202)

# நீரிழிவு நோய்த் தடுப்பு மாதத்தை ஒட்டி யாழ்.மாவட்டத்தில் பல்வேறு நிகழ்வுகள்

தென்மராட்சி,நவ.11

சர்வதேச லயன்ஸ் கழகத்தினர் நவம்பர் மாதத்தை நீரிழிவு நோய்த்தடுப்பு மாதமாகப் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

இதனையொட்டி இன்று சனிக்கிழமை யாழ். மாவட்டத்தின் பல இடங்களிலும் நீரிழிவு விழிப்புணர்வுக் கருத்தரங்குகளிலும் நீரிழிவு நோய் பரிசோதனைகளும் மேற்கொள்ளப் படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை சர்வதேச லயன்ஸ் கழக 306 பி 1 மாவட்ட சுகாதாரப் பிரிவுத் தலைவர் லயன் டாக்டர் எஸ்.எஸ். அருளானந்தம் மேற்கொண்டு வருகிறார்.

அன்றைய தினம் காலை 9 மணி தொடக்கம் சாவகச்சேரி மாவட்ட மருத்துவமனையிலும் சாவகச்சேரி நவீன சந்தை சதுக்கத்திலும் நீரிழிவு நோய்ப் பரிசோதனைகள் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினால் நடத்தப்படவுள்ளன.

இதேவேளை - சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள 26 ஆரம்ப சுகாதார நிலையங்களில் நீரிழிவு பரிசோதனை நடத்தப்படவுள்ளன.

இதற்கான மருந்துப் பொருள்களும் உபகரணங்களும் கழகத்தினரால் சுகாதார வைத்திய அதிகாரியிடம் அண்மையில் கையளிக்கப்பட்டன எனவும் -

அந்தந்தப் பிரிவு குடும்ப நல உத்தியோகத்தருடன் இணைந்து கழக உறுப்பினர்கள் நீரிழிவு, விழிப்புணர்வு கருத்தரங்குகளையும் பரிசோதனைகளையும் நடத்தவுள்ளனர் எனவும் - சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன்ஸ் வ.ஸ்ரீபிரகாஸ் தெரிவித்தார். (202)

# சைவ சமயப் பரீட்சை

காரைநகர்,நவ.11

காரைநகர் மணிவாசகர் சபை வருடாந்தம் நடத்தும் சைவ சமயப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

காரைநகர் பிரதேச பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்படவுள்ள இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் அடுத்த மாதம் 4ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் பாடசாலை அதிபர் ஊடாக விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு சபையின் பரீட்சைச் செயலாளர் க.தில்லையம்பலம் கேட்டுள்ளார்.

பரீட்சையில் அதிகூடிய புள்ளி பெறும் மாணவர்களுக்குத் தங்கப் பதக்கமும் சிறந்த பெறுபேறுகளைப் பெறும் மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெறும் மணிவாசகர் விழாவில் வைத்து வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (1-202-73)


**விற்பனைக்கு**

7.5 Kw லிஸ்ரர் ஜெனரேற்றர்,Honda EP 2500 ஜெனறேற்ரரும்,றொபின் 20 நீர் இறைக்கும் இயந்திரம் விற்பனைக்குண்டு.

மூர்த்தி
63/18,சிவன் வீதி, பரவைக்குளம்,
திருநெல்வேலி.

**Alliance Francaise de Jaffna**
83,Palaly Road, Kantharmadam, Jaffna, Srilanka
Phone: 021 222 8093 .
E-mail: alliancejaffna@yahoo.com

யாழ். பிரெஞ்சு நட்புறவுக் கழகம்
பிரெஞ்சு மொழி வகுப்புகள்

**புதிய பிரிவு**

கல்லூரி மாணவர்களுக்கான, வேலை செய்வோருக்கான, மொழி பயிலும் ஆர்வமுள்ளோருக்கான, உயர் கல்வி பெற விரும்புவோருக் கான தொடக்க நிலை வகுப்புகள் (18.11. 2006) சனிக்கிழமை அன்று ஆரம்பிக்கப்படவுள்ளன.

இத்திட்டம் இலங்கையிலுள்ள பிரெஞ்சு தூதரகத்தின் அனுசரணையுடன் நடைபெறுகின்றது.

ஒரு வருடத்தில் சர்வதேச தரத்திலான பிரெஞ்சு மொழிப் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்.
பதிவுகளுக்கு நேரில் வரவும்
விவரங்களுக்கு தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகள்:
தினமும் காலை 8.30 - மு.ப.11.30 வரை
மாலை 3.00 - பி.ப. 5.00 மணி வரை

**IDM** The Nation's ICT Academy
**Computer Studies Islandwide (pvt)Ltd**
**Affiliated University College**
**216, Navalar Road, Jaffna.**
T.P No :- 021-4591398 web :- www.idm.org, www.idm.edu

இலங்கையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்துறையில்
அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில்
இன்றே இணையுங்கள்

**MID TERM COURSES**

VB
C++
JAVA
HTML
JAVA SCRIPT
VB.NET
MS.OFFICE

Duration 02 Months Only

DTP
INTERNET & E-MAIL
AUTO CAD
FLASH MX
DREAM WEAVER
SQL

| Degree Courses | Diploma Courses | International Courses |
|---|---|---|
| NCC (UK) | Dip. in. H. W | MCP |
| HND (UK) | Dip. in. ICT | MCSE |
| | DIBM | ICDL |

Week day :- 14-11-2006
Week end :- 18-11-2006

**Australia, U.K. ஆகிய நாடுகளின் பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்புகளை Singapore, Malasia ஆகிய நாடுகளில் கற்க அரிய சந்தர்ப்பம்**

★ கலைவர்த்துறை ★ வணிகத்துறை
★ Hotel Management

மற்றும் ஏனைய துறைகளையும் கற்று இறுதி ஆண்டில் U.K., Australia ஆகிய நாடுகளில் கல்வியைத் தொடர முடியும்.

★ O/L சித்தி போதுமானது
★ கட்டணங்கள் அனைத்தும் மாணவர்களால் நேரடியாக கல்லூரிகளில் செலுத்த முடியும்.
★ பகுதி நேர வேலைவாய்ப்பு வசதி (சில துறைகளில்) ( Rs. 40,000 - Rs. 45,000 மாதாந்தம்)
★ பாதுகாப்பான விரைவான பயண ஏற்பாடும் தங்குமிட வசதியும் செய்து கொடுக்கப்படும்.
★ பல வருட அனுபவம் வாய்ந்த எங்களுடன் தொடர்புகொண்டு தேவையற்ற பண, கால விரயத்தைத் தவிர்க்கவும்.

சனி, ஞாயிறு தினங்களில் தொடர்பு கொள்ளல் விரும்பத்தக்கது.

**Bright Future Institute**
*C/o Arul Communication*
*No.1, Brown Road, Jaffna.*
*T.P.: 222 3536, 7646, 7097*

2007 ஆம் ஆண்டுக்கான பதிவுகள் மேற்கொள்ளப் படுகின்றன.

(55114)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*யாழ். - கொழும்பு விமான சேவைகள் தனியார் நிறுவனத்தின் நான்கு பேர் பயணிக்கத்தக்க சிறு விமான சேவை உத்தரவாதத்துடன் நடைபெறுகிறது.*

தொடர்பு: 0785788811 - 0785325501
0114964994 - Fax: 0112721789



**விற்பனைக்கு**

*குறைந்த விலையில் 45 நாள் பூர்த்தியான அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.*

R.ரூபனி, 6, கடுக்காயடி வீதி, நல்லூர்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### அண்ணாச்சாமி மறைக்காடர் (S.L.T.S. - I)



எமது கல்லூரியில் 13 வருடங்கள் ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றிய அண்ணாசாமி மறைக்காடர் அவர்கள் தனது 30 வருட ஆசிரிய சேவையில் இருந்து இன்று (11.11.2006) 60ஆவது அகவை நிறைவில் ஓய்வு பெறுகிறார். அவர்கள் எமது கல்லூரியில் ஆற்றிய சேவைகளைப் பாராட்டி வாழ்த்துவதோடு; பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்ந்து கல்விச்சேவையுடன் சமூக சேவைகளும் சிறப்புடன் ஆற்ற இறைவனை வேண்டுகின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/அச்சுவேலி மத்தியகல்லூரி,
அச்சுவேலி.

(55098)

## சேவைநலன் பாராட்டு

கல்வித் திணைக்களத்தின் கீழ் ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, அதிபராகச் சேவையாற்றிய 38 வருட கால சேவையில் இறுதி ஐந்து வருடங்களாக எமது பாடசாலையில் அதிபராக இருந்து 12.11.2006இல் ஓய்வுபெறும்

**திரு.அப்புக்குட்டி நடராசசுந்தரம்**

அவர்களது சேவையைப் பாராட்டி வாழ்த்தி எதிர்காலம் சிறப்புற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*[illegible]ம்பப் பிரிவு ஆசிரியர்கள்,*
*ஆ[illegible]ம்பப் பிரிவு மாணவர்கள்.*
**யா/ஏழாலை மகாவித்தியாலயம்.**

(55055)


**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777- 222422

**ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்**

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc..
Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter.
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Micro media Flash MX
Course Fee :2000/=

**ஒரே நாளில் ஆரம்பம்:- 13/11/2006 - 08.30**

ஏனைய அனைத்துக் கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் 10/11/2006, 11/11/2006,12/11/2006, 15/11/2006 ஆகிய திகதிகளில் ஆரம்பமாகின்றது.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 03 . 01 . 1938



மறைவு 23 . 10 . 2005

**அமரர் வேலுப்பிள்ளை வேல்முருகு (மண்டலாய்)**
**(வைத்தியசாலை மேற்பார்வையாளர்)**
**திதி: அபரபக்க சஷ்டி 11.11.2006**

ஓராண்டு ஓடி மறைந்தாலும்
ஆறிடுமோ எம் துயரம் ஐயா!
எம் உயிர் உள்ளவரை
ஆறாத எம் துயரம் நீங்காத
உன் நினைவுகளோடு...

*கட்டுக்கொம்பரை,*
*அல்வாய் கிழக்கு,*
*அல்வாய்.*

உன் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளை[illegible],
சகோதரி, மருமகள்.

(55077)

### காரைநகர் பிரதேச குழந்தைகளுக்கு பால்மா விநியோகம்

காரைநகர்,நவ.11

காரைநகர்ப் பிரதேசத்தில் உள்ள 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான பால்மா விநியோகம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முதல்காரைநகர் வைத்தியசாலையில் இடம்பெற்றுவருகின்றது என காரைநகர் பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ்.பரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஒன்று தொடக்கம் 3 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு அங்கர் 1+ பால்மாவும், 3 தொடக்கம்5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு அங்கர் 3+ பால்மாவும் வழங்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (202-73)

### பொக்கனைக்குளம் புனரமைப்பு

உலக உணவுத் திட்டத்தின் கீழ் மாதகல் பொக்கனைக் குளம் ஆழமாக்கப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

ஆயிரத்து 69 மனித வலுவைக் கொண்டு இக்குளம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதாக மாதகல் விவசாய சம்மேளனத் தலைவர் வி.சிற்றம்பலம் தெரிவித்தார்.

(202-135)

### நாவலர் குருபூசை குறித்தகலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,நவ.11

நாவலர் குருபூசை அடுத்தமாதம் 11ஆம்திகதி நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதனையொட்டிய கலந்துரையாடல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணிக்கு நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அறநெறிப் பாடசாலையின் கலை நிகழ்ச்சிகள் தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளன.

(1-202)

### திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், நவ.11

மாணிக்கவாசகர் மடாலயத்தின் ஆதரவில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6மணிக்கு காரை ஈழத்துச் சிதம்பர ஆலைய மண்டபத்தில் திருவாசக முற்றோதல் பிரார்த்தனையும் திருமுருகாற்றுப் படைப் படிப்பும் நடைபெறவுள்ளன.

மக்களின் விடுதலைக்காக திருமுருகாற்றுப் படைப் படிப்பும் நாட்டில் சாந்தி,சமாதானம் [illegible] பெறவுள்ளன.

(202)

### அபிவிருத்திச் சங்கங்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனசரனையுடன் காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனை நடத்தும் கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் நிர்வாகிகளுக்கான தலைமைத்துவப் பயிற்சி எதிர்வரும் 16,17, 18ஆம் திகதிகளில் காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.அழகேந்திரன் தெரிவித்தார். (202-73)

## சேவை நலன் பாராட்டு

யா/ஏழாலை மகாவித்தியாலய
அதிபர்
**திரு அ.நடராசசுந்தரம்**
*[(J.P), B.A., SP.Trd., S.L.P.S.-I]*



*அவர்கள் இன்று (11.11.2006) அகவை அறுபதை அடைவதையிட்டு மனமார வாழ்த்துவதோடு அவரது ஓய்வு காலத்தில் சகல செல்வங்களும் பெற்று குடும்பத்தினருடன் ஆரோக்கியமாகவும் நீண்ட ஆயுளுடனும் வாழ இறையாசி வேண்டி வாழ்த்துகின்றோம்.*

*யா/ ஏழாலை மகா வித்தியாலயம்* — **ஆசிரியர் கழகம், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் .**

---

சாவகச்சேரி பிரதேச சபை
01.01.2007 முதல் 31.12.2007 வரை
சந்தை/ இறைச்சிக் கடைகளைக் குத்தகைக்கு விடுவதற்கான

## கேள்வி அறிவித்தல்

1. கேள்விப் பத்திரம் வழங்குமீ கடைசித் திகதி : 20.11.2006 (பி.ப. 1 மணிவரை)
2. கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: 21.11.2006 (ந.ப. 12 மணிவரை)
3. கேள்வி திறக்கப்படும் திகதி : 22.11.2006 (மு.ப. 10.30 மணிக்கு)

### கேள்வி அறிவித்தல் அட்டவணை

| இல | குத்தகை விவரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வற் வரி தவிர) | கேள்விப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப்பணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| 1 | கொடிகாமம் சந்தைக் குத்தகை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு உட்பட) | 12, 00000.00 | 12, 000.00 | 500.00 |
| 2 | கொடிகாமம் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 285, 000.00 | 3, 000.00 | 200.00 |
| 3 | கொடிகாமம் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 10, 000.00 | 500.00 | 100.00 |
| 4 | கொடிகாமம் சந்தை கருவாட்டுக் கடை இல. 1 | 8, 100.00 | 500.00 | 100.00 |
| 5 | கொடிகாமம் சந்தை கருவாட்டுக் கடை இல. 2 | 8, 100.00 | 500.00 | 100.00 |
| 6 | வரணிச் சந்தை குத்தகை | 106, 200.00 | 1, 500.00 | 200.00 |
| 7 | வரணிச் [illegible]தை மாட்டிறைச்சிக்கடை | 10, 000.00 | 500.00 | 100.00 |
| 8 | வரணி இயற்றாலைச் சந்தை | 1, 000.00 | 500.00 | 50.00 |
| 9 | கைதடிச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 85, 200.00 | 850.00 | 200.00 |
| 10 | கைதடிச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 27, 000.00 | 300.00 | 200.00 |
| 11 | கைதடிச் சந்தைக் குத்தகை | 38, 000.00 | 1, 500.00 | 100.00 |

குறிப்பு:-

* இறைச்சிக் கடைகளுக்கான சபையால் விதிக்கப்படும் மாத வாடகை செலுத்த வேண்டும்.
* கேள்விப் பத்திரக் கட்டணம், கேள்வித்தொகை, மாதவாடகை என்பவற்றுக்கு பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (15%) மேலதிகமாகச் செலுத்தப்பட வேண்டும்.
* கேள்விப் பத்திரங்கள் கோருபவர்கள் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையைக் கொண்டுவருதல் வேண்டும்.
* கேள்வித் தொகைக்கு மேலதிகமாக வற்வரி 15% செலுத்த வேண்டும்.
* சந்தை வளவில் உள்ள கடைகளுக்கு எந்த வரி அறவீடுகளும் மேற்கொள்ளக்கூடாது.
* கால்நடைகள் கைதடிக் கொல்களத்தில் வெட்டப்பட்டு சுகாதார பரிசோதகரின் அனுமதியுடன் இறைச்சிகள் கொண்டுவருதல் வேண்டும்.
* மேலதிக விவரங்களை தலைமை அலுவலகங்களிலும் உப அலுவலகங்களிலும் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
* போதிய காரணங்களால் கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்குண்டு.

சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்.
08.11.2006

**கு.ந.பாலச்சந்திரன்**
செயலாளர்,

(சி-51300)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

## தமிழ்த் தேசியத்தின் குரலை பிரதிபலித்தமைக்குப் பரிசு!

தமிழ்த் தேசியத்தை - ஈழத் தமிழர்களின் அபிலாஷைகளை - தலைநகர் கொழும்பில் ஓயாது பிரதிபலித்த ஒரு ஜனநாயகக் குரல் அடக்கப்பட்டு விட்டது. ஒரு ஜனநாயக வாதியின் - மக்கள் பிரதிநிதியின் - குரல்வளையைத் துப்பாக்கிச் சன்னங்கள் அறுத்துச் செயலிழக்கச் செய்திருக்கின்றன.

தனது மனதில் பட்டதை - தனக்கு நியாயம் என உணர்ந்ததை - அச்சமின்றி அப்பட்டமாக வெளிப்படுத்திப் போட்டுடைக்கும் தைரியசாலியான யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ், தனது இனத்தின் மேம்பாட்டுக்காகத் தாம் ஓயாது ஆற்றிய பணியின் பரிசாக மரணத்தை ஏற்றுக் கொள்ள வைக்கப்பட்டிருக்கின்றார். ஒரு மக்கள் தலைவனின் உயிர், மறைந்திருந்து தாக்கும் கொலைஞனின் துப்பாக்கிச் சன்னத்துக்குப் பலியாகியிருக்கின்றது.

தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் சரளமாக உரையாடும் வல்லமை பெற்றவரான ரவிராஜ் அதன் காரணமாக நாடாளுமன்ற அரசியலில் அதிகம் பிரகாசித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெரும்பாலும் தமிழிலும், ஆங்கிலத்திலும் புலமை பெற்றிருந்த போதிலும் மும்மொழிகளிலும் அடித்துப் பேசும் வல்லமை அவர்களில் ஒரு சிலருக்குத்தான் உண்டு. அவர்களில் முதன்மை இடம் ரவிராஜுக்கே.

தொழில் ரீதியான சட்டத்தரணி என்பதால் இயல்பாகவே வாதத் திறமை கைவரப் பெற்ற ரவிராஜ், சிங்களப் பேரினவாதிகளை அவர்களது மொழியிலேயே வாயடைக்கப் பண்ணி அவர்களின் எரிச்சலுக்கும், சீற்றத்துக்கும் ஆளாகி வந்தார். அதுவே - அத்திறமையே - அவரின் உயிர் காவு கொள்ளப்படவும் காரணமாகியிருக்கின்றது.

இன ரீதியாக அடக்கி, ஒடுக்கப்படும் - பாகுபாட்டுக்கு உள்ளாக்கப்படும் - சிறுபான்மையினரான ஈழத் தமிழர்களின் பக்கத்தில் உள்ள நியாயங்களையும், அவர்களது விடு தலைப் போராட்ட விழுமியங்களையும் -

தமிழர்களை அடக்கி ஆள முற்படும் தென்னிலங்கை அதிகார வர்க்கத்தின் - பேரினவாதிகளின் - முகமூடிகளைக் கிழித்து அவர்களின் உண்மைச் சொரூபத்தையும் -

பெரும்பான்மைச் சிங்களவர்களுக்கு அவர்களுக்குப் புரிந்த - அவர்களது - மொழியிலேயே அம்பலப்படுத்தும் ரவிராஜின் ஆளுமை பேரினவாதிகளிடையே முதலாவது எதிரியாக அவரை அடையாளப்படுத்தியிருந்தது.

தென்னிலங்கையில் அதிக வரவேற்பைப் பெற்ற தொலைக்காட்சி விவாதங்களில் பேரினவாதத் தலைவர்களுடன் தாம் ஒருவராகத் தனித்து நின்று அவர் சொற்சிலம்பாடிய காரணத்தினால், தமிழர் தரப்பின் நியாயம் சிங்களத்தின் ஆன்மாவைத் தெ..டு உலுப்பும் நிலைமை உருவாகி வந்தமையும் அவதானிக்க முடிந்தது.

அது மட்டுமல்ல. தமது வாக்கு வங்கியையும், செல்வாக்கையும், உயர்த்துவதற்காகத் தென்னிலங்கையின் ஒன்றும் புரியாத மக்கள் மத்தியில் இனவாதத்தை விதைத்து, அதன் மூலம் அரசியல் இலாபமீட்ட முயன்ற சக்திகளுக்கு, ரவிராஜின் மும்மொழித் திறமை பெரும் விழுக்காட்டை ஏற்படுத்தியது. அதன் பெறுபேறே அவரது உயிர் மூச்சு பறிப்பட்ட இந்தக் கொடூரம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களின் உயிர்கள் அண்மைக் காலத்தில் பறிக்கப்பட்டிருக்கின்றன.

முதலாமவர் - மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரும், மூத்த அரசியல்வாதியுமான ஜோஸப் பரராஜசிங்கம்.

கடந்த கிறிஸ்மஸ் தினத்தன்று தேவாலயத்துக்குள் ஆராதனையில் ஈடுபட்டிருந்த சமயம் கொலைஞர்களின் துப்பாக்கிகள் அவரின் உயிரைக் குடித்தன.

அடுத்தவர் - அமரர் ரவிராஜ்.

ஜோஸப் பரராஜசிங்கம், ரவிராஜ் இருவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த இரண்டு எம்.பிக்கள் என்றாலும் இவர்கள் இருவரின் செயற்பாட்டிலும் முக்கிய ஒருங்கிணைவு ஒன்று உள்ளது.

ஜோஸப் பரராஜசிங்கம் தாம் கொலை செய்யப்படுவதற்கு முன்னர் பல ஆண்டுகளாகப் பல்வேறு நாடுகளுக்கும் விஜயம் செய்து, நாடுகளின் தலைவர்கள் மட்டத்தில் - இராஜதந்திர ரீதியில் - ஈழத் தமிழர்களின் அவல நிலையை அம்பலப்படுத்தி வந்தவர். ரவிராஜ் உள்நாட்டில் - தென்னி லங்கைக்குப் புரியும் மொழியில் - மேற்கொண்ட அதே பிரசாரப் பணியை, உலக மட்டத்தில் மேற்கொண்டவர் ஜோஸப் பரராஜசிங்கம்.

ஆக, சர்வதேச மட்டத்திலும், தேசிய ரீதியிலும் தமிழர்களின் - தமிழ்த் தேசியத்தின் - குரலை ஒலித்தவர்களின் குரல்வளைகள் நசுக்கப்பட்டிருக்கின்றன.

இதேபோன்று, தமிழ்த் தேசியத்தின் குரலை தமது பேனா முனையில் பிரதிபலித்த குற்றத்திற்காகத்தான் ஊடகவியலாளரான சிவராம், நடேசன், சுகிர்தராஜன், நிமலராஜன் போன்றோரின் குரல்வளைகளும் நசுக்கப்பட்டன.

தமிழர் தரப்பு நியாயங்களை எடுத்துரைப்போருக்கு பரிசு இதுதான் போலும். இதுவே தென்னிலங்கை நீதி முறைமையாகவும் தொடர்கின்றது.

அமரர் ரவிராஜைப் பொறுத்தவரை அவர் அண்மைக் காலத்தில் வடக்கு - கிழக்கிலும், கொழும்பிலும் துணைப் படைகளாலும், ஒட்டுக்குழுக்களாலும், அவற்றை இயக்கும் அரச படைகளின் புலனாய்வுப் பிரிவினராலும் மேற்கொள்ளப்பட்டு வருபவை என்று கருதப்படும் ஆட்கடத்தல்கள், கப்பம் அறவிடல், படுகொலைகள் போன்ற அராஜகங்களை அம்பலப்படுத்துவதில் முன்னின்று செயற்பட்டவர். அரச பாதுகாப்புத் துறையின் போலி வேடத்தைக் களையச் செய்து, உண்மையை அம்பலப்படுத்துதில் முன்னின்று உழைத்தவர். அதுவும் அவரது உயிர் பறிக்கப்படுவதற்குக் காரணமாக அமைந்திருக்கலாம்.

எது எப்படியென்றாலும் தமிழர் நலனுக்காக ஓய்வு, ஒழிச்சலின்றி உழைத்த ஓர் உண்மைக் கர்ம வீரனின் உயிர் அராஜக முறையில் பறிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், இதன் மூலம் அவர் ஆற்றிய பணி முடிவுக்கு வந்து விட்டது என்று அர்த்தமல்ல. அதைத் தொடர இன்னும் நூற்றுக் கணக்கானோர் காத்திருக்கிறார்கள். அமரர் ரவிராஜின் பணியை அவர்கள் தொடர்வார்கள் என்பதில் ஐயமில்லை. அதன் மூலம் ரவிராஜின் இலக்கும், நோக்கும் ஈடேறி, நடைமுறைப் படுத்தப்படுவதை அவர்கள் உறுதிப்படுத்தி, ரவிராஜின் கனவை நனவாக்குவார்கள். அதுவே அவருக்குத் தமிழ்ச் சமூகம் ஆற்றக் கூடிய கைம்மாறாகும்.

---

ஈழத் தமிழர்கள் மீதான தாக்குதல்கள்:

# இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கும் கருணாநிதியைப் போன்று ஆழ்ந்த கவலை



புதுடில்லி, நவ. 11

ஈழத் தமிழர்கள் மீதான படுகொலைத் தாக்குதல்கள் குறித்து தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி கொண்டுள்ள அதே கவலையைத் தாமும் கொண்டிருக்கின்றார் என்று இந் தியப் பிரதமர் மன்மோகன்சிங், தமிழக முதல்வருக்குத் தெரியப்படுத்தியிருக் கின்றார்.

ஈழ்த் தமிழர் பாதிப்பால் எழுந்துள்ள பிரச்சினையை இலங்கையுடன் விரைந்து தொடர்புகொண்டு தீர்த்துக் கொள்வதற்காக அது குறித்து வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜியுடன் தாம் பேசவிரு..ார் என்றும் இந்தியப் பிரதமர், தமிழக மு..வருக்கு உறுதியளித்திருக்கின்றார்.

தமிழக முதல்வர் கருணாநிதியின் சார்பில் அவரது தி. மு. கழகத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர் ரி. ஆர். பாலு நேற்று இந்தியப் பிரதமரை அவசரமாகச் சந்தித்தார்.

ஆத்திரமூட்டப்படாத நிலையிலும், இலங்கை இராணுவம் கண்மூடித்தனமாக தமிழர்கள் மீது தாக்குதல் நடத்துவதை விரைந்து தடுத்து நி..து வதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்குமாறு இந்தியப் பிரதமரை வலியுறுத்தவே தமது பிரதிநிதியாக அமைச்சர் பாலுவை முதல்வர் கருணாநிதி பிரதமரிடம் அனுப்பி வைத்தார்.



நூற்றுக்கணக்கான ஈழத்தமிழர்களைக் கொன்றொழித்துப் பழி தீர்க்கும் இலங்கை இராணுவ அராஜகத்தைக் கண்டித்து முதல்வர் கருணாநிதி விடுத்த அறிக்கையின் பிரதியையும் அமைச்சர் பாலு, இந்தியப் பிரதமரிடம் கையளித்தார்.

அப்போதே -

தமிழக முதல்வர் போல இவ்விடயத்தில் (ஈழத் தமிழர் மீதான தாக்குதல் விவகாரத் தில்) தாமும் அதேயளவு ஆழ்ந்த கவலை கொண்டிருக்கின்றார் எனவும் -

இலங்கையுடன் இப்பிரச்சினையை விரைந்து தீர்த்துக்கொள்ளும் உபாயம் குறித்துத் தாம் தமது வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜியுடன் ஆலோசிப்பார் எனவும் -

பிரதமர் கூறினார் என அமைச்சர் பாலுவின் அலுவலகச் செய்திகள் தெரிவித்தன.

வாகரைப் படுகொலைகள் குறித்து அமைச்சர் பாலு, பிரதமர் மன்மோகன் சிங்குக்கு விளக்கினார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## வாகரைப் படுகொலைக்கு ஐ.நா. சபையும் கண்டனம்

கொழும்பு,நவ.11

வாகரையில் பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டமைக்கு ஐக்கிய நாடுகள் சபை கடுமையான கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை அலு வலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வாகரை - கதிரவெளியில் பாதுகாப்பற்ற நிலையில் பாடசாலையில் வாழ்ந்த அகதிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் நியாயப்படுத்த முடியாதது. மிகவும் அடிப்படையான மனித உரிமைகளை மீறிய செயலாகும் இது.

திருகோணமலை மோதல்களில் இடம்பெயர்ந்தோரே கதிரவெளிப் பாடசாலையில் தங்கியிருந்தனர்.

வாகரைத் தாக்குதலைக் கண்டிக்கிறோம். இத்தகைய கோரச் சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் உரிய அதிகாரிகள் உடனடியாக விசாரணை நடத்த வேண்டும் - என்று கேட்டுக் கொள்கின்றோம். அனைத்துத் தரப்பினரும் மனித உரிமைகளையும், சட்டங்களையும் பாதுகாக்க வேண்டும்.

2 ஆயிரம் பொது மக்கள் இடம் பெயர்வதை விடுதலைப் புலிகள் தடுத்தனர் என வெளியான செய்திகள் குறித்து அதிருப்தியடைகிறோம். பாதுகாப்பான இடங்களுக்கு மக்கள் செல்வதை விடுதலைப் புலிகள் அனுமதிக்க வேண்டும் - என்று ஐ.நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## யாழ். நகரில் நேற்றுச் சோதனை தீவிரம்

குருநகர்,நவ.11

யாழ். நகரப்பகுதியில் படையினர் நேற்று தமது சோதனை நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியிருந்தனர்.

இதனால், யாழ். நகருக்குள் உள்நுழைந்த பொதுமக்கள் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் வைத்து அடையாள அட்டை பரிசோதிக்கப்பட்டதன் பின்னர் யாழ். நகரிற்குள் உட்செல்ல அனுமதிக்கப் பட்டனர்.

யாழ். நகரில் இருந்து வெளியேறியோர் யாழ். போதனா வைத்தியசாலையின் அலு வலர் உள்நுழையும் வாயில் பகுதியிலும் -

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் யாழ். முதலாம் குறுக்கு வீதிச் சந்தி முன்பாக வைத்தும்- அடையாள அட்டைகள் பரிசீலனையின் பின்னர் வெளியேற அனுமதிக்கப்பட்டனர். இச் சுற்றிவளைப்பின் போது சிலர் உடற்சோதனைக்கும் உட்படுத்தப்பட்டனர். மேற்படி சுற்றிவளைப்பு நேற்று முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை இடம்பெற்றது.

யாழ். நகரில் இருந்து வெளியேறிய பொதுமக்கள் மற்றும் ஊழியர்கள் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் முதலாம் குறுக்குவீதிச் சந்தியில் வைத்து மீண்டும் நேற்றுப் பிற்பகல் 2 மணி தொடக்கம் படையினரால் உடல் மற்றும் அடையாள அட்டைகள் பரிசீலனையின் பின்னர் வெளியேற அனுமதிக்கப்பட்டனர். (51-88)

## கப்பல் பயணிகள் வந்து சேர்ந்தனர்

யாழ்ப்பாணம்,நவ.11

திருகோணமலையிலிருந்து கப்பல் மூலம் அழைத்துவரப்பட்ட பயணிகள் நேற்றுப் பிற்பகல் யாழ். நகரப்பகுதியை வந்தடைந்தனர்.

வியாழக்கிழமை காலை திருகோணமலையிலிருந்து பயணிகளுடன் புறப்பட்ட இந்தக் கப்பல், அன்றையதினம் மாலை வடபகுதிக் கடலில் இடம்பெற்ற மோதலை அடுத்து சர்வதேசக் கடற்பரப்புக்கு நகர்த்தப்பட்டதாக தகவல் ஒன்று வெளியாகியிருந்தது.

இந்த நிலையில் - நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் குறித்த கப்பல் காங்கேசன்துறையை வந்தடைந்தது என்றும் -

அதனையடுத்து உடனடியாக பயணிகள் கப்பலிலிருந்து இறக்கப்பட்டு பஸ்களில் யாழ். நகருக்கு அழைத்து வரப்பட்டனர் என்றும் - யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்தது.

குறிப்பிட்ட பயணிகள் கப்பல், தற்போது காங்கேசன்துறை துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ளது என்றும் -

அடுத்த பயணிகள் கப்பல் சேவை குறித்து தீர்மானிக்கப்படவில்லை என்றும் - யாழ். சிவில் நிர்வாக அலுவலக வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதற்கிடையில், யாழ்ப்பாணத்தில் இருந்து கப்பல் மூலம் வெளிமாவட்டங்களுக்குச் செல்வதற்காக நேற்று முன்தினம் தெல்லிப்பழைக்கு அழைத்துச்செல்லப்பட்டவர்கள் நேற்றுக்காலை திருப்பிவந்தனர்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இவர்கள் தெல்லிப்பழைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

அன்று மாலை வடபகுதிக் கடலில் கடற்புலிகளுக்..ம் - கடற்படையினருக்கும் இடையில் பெ..ம் மோதல் சம்பவம் இடம்பெற்றது. இந்தத் தாக்குதலின் எதிரொலியாகவே கப்பல் பயணத்துக்குச் சென்றவர்கள் திருப்பியனுப்பப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (203-111-68)

## நாளை

ஐப்பசி 26
ஞாயிற்றுக்கிழமை
12.11.2006
திதி : ஸப்தமி
பிற்பகல் : 2.35
நட்சத்திரம் : பூசம்
[illegible]
[illegible] : 09.06 -10.36
ராகுகாலம் : 04.36 -06.06

## 34 நலன்புரி நிலையங்களில் இடம்பெயர்ந்த குடும்பங்கள்

குருநகர், நவ.11

யாழ். மாவட்டத்தில் இடம் பெயர்ந்த மக்கள், சுமார் 34 நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர் என யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தால் அண்மையில் திரட்டப்பட்ட சுகாதாரப் புள்ளி விவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 13 நலன்புரி நிலையங்களும்-

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 8 நலன்புரி நிலையங்களும்-

யாழ். சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 13 நலன்புரி நிலையங்களும் இவ்வாறு இயங்கி வருகின்றன. (51)

## இந்தியாவுக்குள் மஹிந்த நுழைவதற்கு அனுமதிக்கக் கூடாது என ஆர்ப்பாட்டம்

சென்னையிலும், பிற தமிழ் நகரங்களிலும் விடுதலைச் சிறுத்தைகள் நடத்தினர்.

சென்னை, நவ. 11

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இந்தி..வுக்குள் நுழைய விடக்கூடாதெனக் கோரி சென்னையிலும் தமிழகத்தின் முக்கிய நகரங்களிலும் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பினர் நேற்று பெரும் ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்தினர்.

மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்தில் படையினரின் ஷெல் தாக்குதலில் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டமையை வன்மையாகக் கண்டித்திருக்கின்ற விடுதலைச் சிறுத்தைகள், இத்தகைய கொடூரச் செயல்களுக்கு தலைமை தாங்கும் மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவில் காலடி வைக்கத்தகுதியற்றவர் அவரை பாரத தேசத்தினுள் அனுமதிக்கக்கூடாது என்ற கோரிக்கையை முன்வைத்தே நேற்று பல இடங்களிலும் ஆர்ப்பாட்..ங்களை நடத்தினர்.

யாழ்.குடாநாட்டுக்கு தாராளமாக உணவுப் பொருட்கள் கிடைக்கும் வகையில் ஏ-9 வீதியை இலங்கை அரசு உடனடியாகத் திறக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ள விடுதலைச் சிறுத்தைகள், ஏ-9 வீதி திறக்கப்படும்வரை இந்தியாவிலிருந்து இலங்கைக்கான விமானச் சேவைகள் அனைத்தையும் இடை நிறுத்தும்படியும் மத்திய அரசைக் கேட்டுள்ளனர்.

கதிரவெளியில் படையினரின் ஆட்லறித் தாக்குதலில் 60பொதுமக்கள் கொல்லப்பட்டமையை கண்டித்து தி.மு.க., பா.ம.க., விடுதலைச் சிறுத்தைகள், பாரதீய ஜனதா தளம் ஆகிய கட்சிகள் தமது கண்டனத்தை தெரிவித் துள்ளதுடன் இந்திய மத்தியஅரசு தலையிட்டு இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளன. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐ.நா. சபையின் சிறுவர் அபிவிருத்திப் பிரிவின் பிரதிநிதி அலன் றொக் தலைமையிலான குழுவினர் நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்து விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வனைச் சந்தித்து பேச்சு நடத்தியபோது எடுக்கப்பட்ட படம்.

# உலக உணவுத்திட்டப் பிரதிநிதி நேற்று யாழ்ப்பாணம் வருகை

யாழ்ப்பாணம், நவ.11

ஐ.நா. சபையின் உலக உணவுத்திட்டப் பிரதிநிதி ஜிப்பிக்டிஸ் நேற்று யாழ். விஜயம் செய்தார்.

யாழ். அரச அதிபர் கே. கணேஷை சந்தித்த இவர், உலக உணவுத் திட்டத்தின் கீழ், யாழ். மாவட்டத்தில் நடைமுறைபடுத்தப்படும் திட்டங்கள் குறித்து அப்போது கேட்டறிந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில்- இலங்கை வந்துள்ள ஐ.நா வின் சிறுவர் அபிவிருத்திப் பிரிவின் (யுனிசெவ்) பிரதிநிதி அலன்றொக் இன்று காலை யாழ்ப்பாணம் வருகிறார்.

இன்று முற்பகல் 10 மணிக்கு அரச அதிபரை, இவர் சந்தித்துப் பேசுவார் என்று தெரிவிக்கப்பட்டது.



வடபகுதி கடற்பரப்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மோதல் சம்பவத்தின் போது விடுதலைப்புலிகள் வசம் சிக்கிக் கொண்ட கடற்படை வீரர்களில் மூவரை படத்தில் காணலாம். [படம்: புதினம்]

# பிரபல தமிழக எழுத்தாளர் வல்லிக்கண்ணன் காலமானார்

சென்னை, நவ.11

பிரபல தமிழக எழுத்தாளர் வல்லிக்கண்ணன் தமது 86 ஆவது வயதில் சென்னையில் நேற்றுக் காலமானார்.

மணிக்கொடி பரம்பரையின் கடைசி விழுதான இவர், நூற்றுக்கும் மேற்பட்ட படைப்புகளை படைத்துள்ளார்.

'சாகித்திய ரத்தினம்' உட்பட பல விருதுகளை இவர் பெற்றுள்ளார்.

# சிறுவர் ஆக்கத்திறன் கண்காட்சி

செயல்திறன் அரங்க இயக்கத்தின் ஏற்பாட்டில் சிறுவர் ஆக்கத்திறன் கண்காட்சி ஒன்று நாளை காலை 9 மணிக்கு தொடக்கம் பி.ப.2.30 மணி வரை கைதடி நாவற் குழி தெற்கு அ.த.க. பாடசாலையில் நடத்தப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் கலந்துகொள்வார்.

# புலன்விசாரணை சி.ஐ.டியிடம்

கொழும்பு, நவ. 11

ரவிராஜ் எம் .பி. படுகொலை பற்றிய புலன்விசாரணை பொலிஸ் மா அதிபரின் உத்தரவுக்கு அமைய குற்றப் புலனாய்வுப் பொலிஸாரிடம் (சி. ஐ. டியினரிடம்) ஒப்படைக்கப்பட்டிருப்பதாக குற்றப் புலனாய்வுப் பொலிஸார் நேற்று நீதிமன்றத்துக்குத் தெரிவித்தனர்.

ரவிராஜ் மற்றும் அவரது மெய்க்காவலர் படுகொலை குறித்து கொழும்பு மேலதிக நீதிவான் முஹமட் இஸ்ஸடீன் சம்பவ இடத்துக்குச் சென்று முதற்கட்ட விசாரணைகளை நடத்தினார்.

அப்போதே மேற்படி விடயம் அவருக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

பிரேத பரிசோதனைகளை நடத்துமாறு கொழும்பு பிரதம சட்ட வைத்திய அதிகாரிக்கு உத்தரவிட்ட நீதிவான், பின்னர் சடலங்களை உறவினர்களிடம் கையளிக்கவும் பணித்தார்.

இவ்விவகாரம் குறித்து சாட்சிகள் எவரையும் ஆஜர் செய்ய விரும்பினால் எதிர்வரும் 14 ஆம் திகதி அவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தலாம் என சி.ஐ.டியினருக்குத் தெரிவித்த நீதிவான் அதுவரை வழக்கை ஒத்திவைத்தார். (உ - 06)

# ரவிராஜ் எம்.பி. படுகொலைக்கு பொது அமைப்புகள் கண்டனம்

யாழ்ப்பாணம், நவ.11

நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் மற்றும் வாகரையில் பொதுமக்கள்படுகொலைசெய்யப்பட்டமைஆகியசம்பவங்களை யாழ். மாவட்ட பொது அமைப்புகள் வன்மையாகக் கண்டித்துள்ளன.

யாழ். பல்கலைக்கத்தில் நேற்று நடைபெற்ற பொது அமைப்புகள் மற்றும் மனித நேய அமைப்புகள், மதத்தலைவர்கள், கல்வி சார் உயர் அதிகாரிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் இது தொடர்பாகக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

வாகரையில் பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டமையை எக்காரணம் கொண்டும் நியாயப்படுத்திவிட முடியாது. அதே போன்று அதியுயர் பாதுகாப்பு வலயமான கொழும்பில் வைத்து ரவிராஜ் எம்.பி. படுகொலை செய்யப்பட்டதையும் நாம் கண்டிக்காமல் இருந்து விடமுடியாது- என்று நேற்றைய சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது. (68)

## திருமலை...

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

வத்தினர் தெரிவித்தனர்.

இந்த மோதலில் கடற்படையினரின் டோறா ஒன்றும் மூழ்கடிக்கப்பட்டதாக சில இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. எனினும் அந்தத் தகவலை உறுதிப்படுத்த முடியவில்லை.

இம்மோதல் சம்பவம் தொடர்பான விடுதலைப் புலிகள் தரப்புத் தகவல்கள் நேற்று மாலைவரை கிடைக்கவில்லை.(க)

## வாகரை...

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

அந்தச் செய்திக்குறிப்பில்:-

அப்பாவிப் பொதுமக்கள் பலியாவதற்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். உரிய விசாரணைகள் நடத்தப்படுவதன் மூலம் அவர்கள் நீதியின்முன் நிறுத்தப்படல் வேண்டும்.

பொதுமக்களுக்கு இழப்புக்கள் ஏற்படுவதைத் தவிர்க்கும் வழிவகைகள் இனங்காணப்படுதல் மிகவும் அவசியம். அரசும் - விடுதலைப் புலிகளும் விரைவாக சமாதானப் பேச்சுகளுக்குத் திரும்பவேண்டும்

பூநகரியில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவரும் அவரது குழுவினரும் சென்றபோது நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதல் வருத்தத்திற்குரியது - என்று அந்தச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## தமிழர் சக்திகளை.....

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா ராணுவத்தினராலும் அவர்களுடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுவினராலும் மேற்கொள்ளப்பட்ட கடத்தல் மற்றும் படுகொலைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்து வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ், கொழும்பில் படுகொலை செய்யப்பட்டுள்ளமை கண்டனத்துக்குரியது.

ஜெனிவாப் பேச்சுகளுக்குப் பின்னர் இணைத்தலைமை நாடுகளின் தூதுவர்கள் நேரடியாக அரசாங்கத்துடன் சந்திப்பு நடத்திய நிலையில் கொழும்பில் நடந்துள்ள இத்தகைய அரசியல் படுகொலைகளானது ஸ்ரீலங்காவின் அலட்சியத்தை வெளிப்படுத்துகிறது.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராகவும் ஸ்ரீலங்கா அரச இயந்திரத்தின் ஒடுக்குமுறைக்கு எதிராகவும் பணியாற்றிய ரவிராஜின் இழப்பானது ஒட்டு மொத்த தமிழ்த் தேசத்தைதுயருக்குள்ளாக்கியுள்ளது - என்று சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

## மட்டு....

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்ட போது அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களின் முக்கிய நகரங்களில் பொலிஸாரும் படையினரும் குவிக்கப்பட்டிருந்தனர். முக்கிய சந்திகள், கேந்திர நிலையங்களில் ஆயுதம் தாங்கிய பொலிஸாரும், படையினரும் ரோந்து சேவையில் ஈடுபட்டிருந்தனர். (க)

## ரவிராஜ் எம்.பி.....

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

இது விடயமாக ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவுடன் தொடர்பு கொள்ளப் பட்டுள்ளதாகவும்-

சாதகமான பதில் கிடைக்கும் பட்சத்தில் எதிர்வரும் செவ்வாயன்று சாவகச்சேரியில் அவரது இறுதிக்கிரியைகளை நடத்தக்கூடியதாக இருக்கும் என்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா 'உதயனுக்'குத் தெரிவித்தார்.

இது விடயமாக மாவை எம்.பி. மேலும் தெரிவித்ததாவது:

ஆயுததாரிகளால் படுகொலை செய்யப்பட்ட ரவிராஜ் எம்.பியின் பூதவுடலை அவரின் சொந்த இடமான சாவகச்சேரிக்கு எடுத்துச் சென்று அங்கு தகனக்கிரியைகளை நடத்த கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

ஏ-9 வீதி ஊடாக பூதவுடலை சாவகச்சேரிக்கு எடுத்துச்செல்வது குறித்து ஜனாதிபதியுடன் தொடர்பு கொள்ளப்பட்டது. விமானம் மூலம் பூதவுடலை எடுத்துச் செல்லலாம் என்ற சாரப்பட ஜனாதிபதி அப்போது பதிலளித்தார்.

ரவிராஜ் எம்.பியின் தலைப்பகுதி பெரிதும் சிதைவடைந்திருப்பதால் பூதவுடலை விமானம் மூலம் எடுத்துச் செல்வதில் உள்ள சிரமம் குறித்து ஜனாதிபதிக்கு அப்போது விளக்கப்பட்டது.

அப்போது அவர் ஏ-9 வீதி ஊடாக பூதவுடலை சாவகச்சேரிக்கு எடுத்துச்செல்வது பற்றி சாதகமான பதிலைத் தருவதாக ஊறுதியளித்தார் - என்று மாவை எம்.பி மேலும் கூறினார்.

## படுகொலை விசாரணைக்கு...

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

ளுக்குஇடையேயான பிளவுகளைக்களைந்து, புரிந்துணர்வை ஏற்படுத்தும் எத்தனங்களுக்குத் தடைபோடும் நோக்கமும் இதில் உள்ளது தெரிகின்றது.

இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற - சர்வோதயத் தலைவர் கலாநிதி ஏ.ரி. ஆரியரத்னவின் 75 ஆவது பிறந்த தின - நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி, தமது நெருங்கிய நண்பர் ரவிராஜ் என்றும், தமக்கு அவரை நீண்ட நாள்களாகத் தெரியும் என்றும் குறிப்பிட்டார்.

''ரவிராஜ் இளைஞர் துடிப்புள்ள அரசியல்வாதி. உறுதியான நிலைப்பாடுடையவர். ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மும் மொழிகளிலும் சரளமாக உரையாடும் திறமை கொண்டவர். மக்களுக்கு முன்னால் தமது கருத்தைத் தெளிவாகவும், திடமாகவும் வெளிப்படுத்தக் கூடியவர்.

எங்கள் இருவருக்கும் இடையில் எப்போதும் நட்புறவுடன் கூடிய கருத்துப் பரிமாற்றம் இருந்து வந்துள்ளது.'' - என்றார் ஜனாதிபதி.

- என்று அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று கொழும்பு - ஜாவத்தை வீதியில் தேசிய வருமானவரித் திணைக்களத்தின் புதிய கட்டடத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இதேபோன்ற கருத்தை அங்கும் வெளியிட்டார்.

ரவிராஜ் கொலைச் சூத்திரதாரிகளை உடன் கைது செய்து சட்டத்தின் முன்நிறுத்த நடவடிக்கை எடுக்கும்படி பொலிஸ் மா அதிபருக்கும், ஏனைய அதிகாரிகளுக்கும் கடும் உத்தரவு பிறப்பித்த பின்னரே தாம் இந்த நிகழ்வில் பங்குபற்ற வந்திருக்கின்றார் என அவர் அங்கு குறிப்பிட்டார்.(உ)

## ஈனத்தனமான....

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

வருமாறும் பொலிஸ்மா அதிபருக்கு உத்திரவிட்டிருக்கிறார்.

''எந்த விடயத்தையும் வெளிப்படையாகப் பேசும் பக்குவமுள்ள கூட்டமைப்பு எம்.பிக்களில் இவரும் ஒருவர். இவரின் கொலைக்கு யார் காரணமாக இருந்தாலும், எத்தகைய சக்திகள் பொறுப்பாக இருந்தாலும் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். ஜனநாயகசமூகத்தின் ஆணிவேரான அரசியல் பன்முகத் தன்மைக்கும், மாற்றுக்கருத்துகளுக்கு மதிப்பளிக்கும் பண்புக்கும் எதிரானவர்களே இந்தக் கொலையின் பின்னணியில் இருந்திருக்கிறார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

எனவே, இந்தச் சக்திகள் எவையாக இருந்தாலும் அவை சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி தனது கண்டன அறிக்கையில் கேட்டிருக்கிறார்.

நாடாளுமன்றத்தில் தாம் அங்கத்துவம் பெற்றிருந்த காலத்திலும், ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னரும் கூட ரவிராஜ் எம்.பியுடன் நல்ல தொடர்புகளைத் தாம் வைத்திருந்தார் என ஜனாதிபதி தமது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தச் சூட்டுச்சம்பவத்தில் மரணமான ரவிராஜ் எம்.பியின் மெய்ப் பாதுகாவலரான லஷ்மனின் குடும்பத்தினருக்கும், ரவிராஜின் குடும்பத்தினருக்கும் ஜனாதிபதி தமது ஆழ்ந்த அனுதாபங்களையும் இந்த அறிக்கை மூலம் தெரிவித்திருக்கிறார்.

## ரணிலும்.....

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

விக்கிரமசிங்க தெரி வித்துள்ளார்.

ரவிராஜ் எம்.பி. சுட்டுக் கொல்லப்பட்டமையைக் கண்டித்து ரணில் விக்கிரமசிங்க ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

''தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. என். ரவிராஜ் மற்றும் அவரது மெய்ப்பாதுகாவலர் ஆகியோர் கொடூரமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்டமையை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. ஜோஸப் பரராஜசிங்கம் சுட்டுக் கொல்லப்பட்டு ஒரு வருடத்திற்குள் அதே கட்சியைச் சேர்ந்த ரவிராஜ் சுட்டுக் கொல் லப்பட்டுள்ளார்.

ரவிராஜ், தேசியப் பிரச்சினையைத் தீர்த்து நிலையான சமாதானம் ஒன்றை உருவாக்குவதற்காக ஓய்வின்றி உழைத்தவர். தேசியப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வொன்றை எட்டுவதற்கு இரு தரப்பினரும் தீவிரமான பேச்சில் ஈடுபட வேண்டும் என வேண்டுகோள் விடுத்து வந்தவர்.

அவர் பல தேசியப் பிரச்சினைகளில் ஈடுபட்டு அவற்றைத் தீர்ப்பதற்காகப் பாடுபட்டதோடு சிங்கள மக்களுடன் நெருங்கிப் பழகி நாட்டில் ஒற்றுமையை ஏற்படுத்தப் பாடுபட்டு வந்தவர்.

இவரது மறைவையொட்டி யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது ஆதரவாளர்கள் மாத்திரமின்றி சரியாகச் சிந்திக்கின்ற எம்போன்ற இந்நாட்டில் உள்ள அனைவருமே மிகவும் கவலையடைவர்.

கொலையாளிகளை பொலிஸார் இதுவரை கைது செய்யவில்லை. கொலையாளிகளைக் கைது செய்வதற்கு ஏற்ப சுதந்திர விசாரணை ஆரம்பிக்கப்பட வேண் டும்.

ரவிராஜின் பிரிவால் துயருறும் அன்னாரின் மனைவி, பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர் அனைவருக்கும் எனது ஆழந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றேன்.'' - எனக் குறிப்பிட்டுள்ளார். (க)


தரம் 9 பரீட்சை வினாத்தாள்
மாகாண பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள் புத்தகசாலைகளில் விற்பனைக்கு
பூபாலசிங்கம் யாழ். நகர். துர்க்கா சுன்னாகம். மொடேன் நெல்லியடி. அருண் சாவகச்சேரி.
அக்கடமி வெளியீடு மட்டும்
3ஆம் தவணை பரீட்சை - 2006
தரம் 4,5,6,7,8,9,10, O/L. மாதிரி வினாத்தாள்கள் விரைவில் இதே இடங்களில்



BRIGHTMAN
ஸ்ரான்லி வீதி, ரோஸ்படி, யாழ். நகர்.
A/L 2008 LOGIC
By: ஜெயந்தன்
இன்று ஆரம்பம்
11.11.2006 Sat.11.00 a.m
Sat / Sun - 11 a.m
★ ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்



விக்னா
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்.
DAY CLASS
தமிழ்
திரு. குழந்தை
புதிய பிரிவு
14.11.2006 9.30 மணி
(Mon, Tue, Thu)


## மரண அறிவித்தல்

**திருமதி கதிரவேலு சோதி**

சங்கத்தானை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கதிரவேலு சோதி நேற்று (10.11.2006) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் ஒரு மணியளவில் கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கத்தானை, சாவகச்சேரி.

தகவல்: மகன், மகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.11.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org